தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

24.05.2013 A.M

## வருவாயைப் பெருக்க விவசாயிகளுக்கு வேளாண் விற்பனைக் குழு யோசனை

கடலூர் மாவட்டத்தில் அரிசி மற்றும் தீவன ஆலைகளை தொடங்கினால் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறமுடியும் என மாவட்ட வேளாண் விற்பனைக்குழு செயலர் ஹரிதாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு. கடலூர் மாவட்டத்தில் பல்வேறு வகையான பயிர்களை விளைவிக்கும் நஞ்சை, தோட்டக்கால் எனப்படும் இறவை புஞ்சை மற்றும் மானாவாரி நிலங்கள் உள்ளன. இந்த நிலங்களில் விளையும் விளைபொருட்களை விவசாயிகள் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

அந்த வகையில் கடந்த 2011-12-ஆம் ஆண்டில் மட்டும் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 60 ஆயிரத்து 53 மெட்ரிக் டன் நெல், 2 ஆயிரத்து 488 மெட்ரிக் டன் கம்பு, 192 மெட்ரிக் டன் ராகி, 5 ஆயிரத்து 664 மெட்ரிக் டன் மணிலா, 4 ஆயிரத்து 456 மெட்ரிக் டன் எள், 2 ஆயிரத்து 333 மெட்ரிக் டன் உளுந்து, 293 மெட்ரிக் டன் பாசிப்பயிறு, 6 மெட்ரிக் டன் பருத்தி, 183 மெட்ரிக் டன் மல்லி, 756 மெட்ரிக் டன் வரகு, 8 ஆயிரத்து 659 மெட்ரிக் டன் இதர விளைபொருட்களும் விற்பனையாகி உள்ளது.

இந்த பொருள்களில் பெரும் பகுதி வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு பக்குவப்படுத்தப்பட்டு மதிப்புக்கூட்டு பொருள்களாக கடலூர் மாவட்டத்துக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. எனவே கடலூர் மாவட்ட விவசாயிகளே வேளாண்மை சார்ந்த உபதொழில்களை தொடங்கி மதிப்புக்கூட்டு பொருள்களை தயாரித்து விற்பனை செய்யலாம்.

கடலூர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் விளைபொருட்களை மூலப்பொருட்களாக கொண்டு நவீன அரிசி ஆலைகள், நவீன கேழ்வரகு மாவு ஆலைகள், நவீன எண்ணெய் பிழியும் ஆலைகள், உளுந்து உடைக்கும் ஆலைகள், உடனடி சமையலுக்கு உதவும் பொருள்கள், உடனடி சாப்பிடும் பொருள்கள், மூலிகை பொருள்கள், கோழித்தீவனம், கால்நடை தீவனம் போன்ற தொழில்களை

ஆரம்பிக்கலாம். ஆர்வமுள்ள விவசாயிகள் இத்தொழில்களை தொடங்க முன்வர வேண்டும் என தெரிவித்துள்ளார் மாவட்ட வேளாண் விற்பனைக்குழு செயலர் ஹரிதாஸ்.

### சிறுதானிய உணவுகள் உடல்நலம் காக்கும்: ஆட்சியர்

சிறுதானிய உணவுப் பொருள்களை உண்பதன் மூலமாக ஆரோக்கியமான உடல்நலனைப் பெறமுடியும் என்று ஆட்சியர் கூறினார்.

காஞ்சிபுரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் திங்கள்கிழமை மாலை பாரம்பரிய பொருள்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. பேரணியை தொடங்கிவைத்து மாவட்ட ஆட்சியர் லி.சித்ரசேனன் பேசியது: பாரம்பரியமாக பயன்படுத்திவந்த இளநீர், சீயக்காய், பருத்தி துணி வகைகள், இளநீர் மற்றும் சிறுதானியங்களான கம்பு, கேழ்வரகு, திணை, சாமை, வரகு போன்ற நார்ச்சத்து மிக்க உணவுப் பொருள்களை உண்பதன் மூலமாக ஆரோக்கியமான உடல்நலனைப் பெற முடியும். நீரிழிவு நோயாளிகளுக்கு சிறுதானிய உணவுகள் மிகச்சிறந்த மருந்தாகும்.

மேலும் பருத்தித் துணி உடுத்துவதால் உடல் உஷ்ணம் குறைவதுடன் தோல் நோய்கள் வராமலும் தடுக்க முடியும். சீயக்காய் தூள் பயன்படுத்துவதால் தலையில் பொடுகு மற்றும் புண் வருவதை எளிமையாகத் தடுக்க முடியும். எனவே காலத்தால் மறக்கடிக்கப்பட்ட பாரம்பரியப் பொருள்களை நாம் பயன்படுத்துவதுடன் பிறர் பயன்படுத்தவும் எடுத்துக் கூறவேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செப்ந்தர்ராஜன் வரவேற்றார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சீத்தாராமன் நன்றி கூறினார்.

### விவசாயிகளுக்கு ஒரு வாரத்தில் பணப் பட்டுவாடா

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்களுக்கு ஒரு வாரத்திற்குள் வியாபாரிகள் பணத்தை பட்டுவாடா செய்ய வேண்டும் என்று புதன்கிழமை நடைபெற்ற முத்தரப்புக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் நெல் உள்ளிட்ட விளை பொருட்களுக்கு உரிய காலத்திற்குள் பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை என்றும், சில வியாபாரிகள் பணம் பட்டுவாடா செய்யாமல் விவசாயிகளை 3 மாதம் வரை அலைக்கழிக்கின்றனர் என்றும், இதனால் செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய பாக்கி ரூ.சுமார் 4 கோடி வரை உள்ளது என்றும் கூறப்படுகிறது.

பணம் பட்டுவாடா பாதிப்பால், விவசாயிகள் பெரும் பாதிப்புக்கும், மன வேதனைக்கும் ஆளாகின்றனர். எனவே முத்தரப்புக் கூட்டத்தை நடத்தி விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள பணத்தை பட்டுவாடா செய்யவேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் அதன் மாநிலக்குழு உறுப்பினர் கோ.மாதவன், விழுப்புரம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூட செயலருக்கு கோரிக்கை விடுத்தார்.

அதனடிப்படையில், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட முத்தரப்புக் கூட்டம் செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடச் செயலர் தலைமை வகித்தார்.வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

முத்தரப்பு பேச்சுவார்த்தையின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானம்: செஞ்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு கண்காணிப்பாளரை அடிக்கடி மாற்றுவதால் நடைமுறை சிக்கல் ஏற்படுகிறது. எனவே, நிலையான ஒரு பணியாளரை பணியில் அமர்த்த வேண்டும்.

21.5.2013 வரை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட விளைபொருள்களுக்குரிய தொகையை உரிய வியாபாரிகளிடம் இருந்து 4.6.2013 க்குள் பட்டுவாடா செய்துவிட வேண்டும்.

4.6.2013-க்கு முன் (21.5.2013 வரை) விவசாயிகளிடம் பெறப்பட்ட விளைபொருட்களுக்கு உரிய தொகையினை வழங்காத வியாபாரிகள் அந்த தொகையினை செலுத்தும் வரை ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி மறுப்பது,

22.5.2013-க்கு பின்னர் விவசாயிகளிடம் இருந்து வாங்கப்பட்ட விளைபொருள்களுக்குரிய கொள்முதல் மதிப்பில் 80 விழுக்காடு பணம் அன்றைய தினமே விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்ய வேண்டும். நிலுவையில் உள்ள தொகையை திங்கள் முதல் அடுத்த திங்கள் வரை முழுமையாக பட்டுவாடா செய்ய வேண்டும்.

தவறும் பட்சத்தில் நிலுவை வைத்துள்ள வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி மறுப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வறட்சி நிவாரணம் : விவசாயிகள் பட்டியல் வெளியீடு

மதுரை மாவட்டத்தில் 2012-13 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், அவர்களுக்கான நிவாரணத் தொகை அடங்கிய பட்டியல் அந்தந்தப் பகுதி தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ.26.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதாவது, மதுரை சரகத்துக்கு ரூ.3.96 கோடியும், உசிலம்பட்டி கோட்டத்துக்கு ரூ.19.10 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத் தொகை மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா மூலம் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அங்கிருந்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் பட்டியல் அடிப்படையில், அந்தந்த தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு நிவாரணத் தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட விவசாயிகள் அந்தந்தப் பகுதி தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களை அணுகி, விவசாயிகளின் பட்டியல், அவர்களுக்கான நிவாரணத் தொகை விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து நிவாரணத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் என மண்டல இணைப்பதிவாளர் பழனிவேலு தெரிவித்துள்ளார்.

மேலும், நிவாரணத் தொகை விவரங்கள் அறிய மதுரை துணைப்பதிவாளர் 9443301093, உசிலம்பட்டி துணைப்பதிவாளர் 9790717275 ஆகிய செல்போன் எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

## மேலப்பெருங்கரை கிராமத்தில் உழவர் பெருவிழா

பரமக்குடி வட்டம் மேலப்பெருங்கரை கிராமத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு வேளாண்மை இணை இயக்குநர் க.சக்திமோகன் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் கார்த்திகைஜோதி முன்னிலை வகித்தார்.

கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் எஸ்.சுந்தரராஜ் விவசாய குழுக்கள் மற்றும் மகளிர் குவினருக்கு பவர் டில்லர் இயந்திரம், கைத்தெளிப்பான் மற்றும் காய்கறி விதைகள் வழங்கினர். இதனைத் தொடர்ந்து தமிழக முதல்வர் விவசாய உற்பத்தியை 2 மடங்கு அதிகரித்திட இரண்டாம் பசுமை புரட்சி திட்டத்தை அறிவித்து வேளாண்துறை சார்பில் நடவடிக்கை எடுத்து வருகிறார். இதனை அனைத்து வருவாய் கிராம விவசாயிகளும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் பேசினார்.

அழிந்து வரும் பாரம்பரிய குறுதானியங்களான குதிரைவாளி, சாமை, தினை, வரகு ஆகியவற்றின் சந்தை வாய்ப்புகள் குறித்தும், தற்போதுள்ள உணவு பழக்க முறைகள் மாறி வருவதால் இவற்றின் பயன் அதிகரிப்பது குறித்தும் பேராசிரியர் எஸ்.சத்திவேல் பேசினார்.

செயற்கை குளிர்பானங்களால் ஏற்படும் தீங்குகள் குறித்தும், இளநீர் அருந்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய தலைவர் கணேசராஜா விளக்கமளித்தார்.

பல்வேறு துறையினர் சார்பில் பாரம்பரிய பொருள்கள் குறித்த கருத்து காட்சியும், கண்காட்சியாக இடம்பெற்றன. முகவை கருவேலம் பூக்களின் தொழில் நுட்பங்கள் குறித்த ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

வேளாண்மை உதவி இயக்குநர் ச.கண்ணையா நன்றி கூறினார்.

## கால்நடை தீவனங்கள் பயிரிட ரூ.1.29 கோடி நிதி ஒதுக்கீடு

வறட்சியால் கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க, கால்நடை தீவனப் பயிர்கள் பயிரிட ஈரோடு மாவட்டத்துக்கு ரூ.1.29 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறை திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு ஆட்சியர் வே.க.சண்முகம் கூறியது:

இயற்கையின் மாற்றத்தாலும், பருவகால சுழற்சியாலும் கடும் வறட்சி ஏற்படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்போர் சிரமத்துக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதைப்போக்க ஈரோடு மாவட்டத்துக்கு கால்நடை தீவன சோள உற்பத்தியை பெருக்குவதற்காக கால்நடைகளுக்கு தேவையான உணவு கிடைப்பதற்கு ஏதுவாக 1,900 ஏக்கர் பரப்பில் தீவன சோளம் பயிரிடுவதற்கு ரூ.1.29 கோடி நிதியை முதல்வர் ஒதுக்கியுள்ளார்.

குறைந்தபட்சம் அரை ஏக்கர் பரப்பளவும், அதிகபட்சமாக 1 ஏக்கர் பரப்பளவும் உள்ள விவசாயிகள் கால்நடை தீவன சோளம் பயிரிடுவதற்கு வறட்சி நிவாரண நிதி அரசு மானியமாக அதிகபட்சம் ரூ.6,800 வழங்கப்படும். இதை கால்நடை வளர்ப்போர் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் கால்நடைகளுக்கு தேவையான தீவன சோள உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் தங்கள் பகுதியில் கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடம் இந்தத் திட்டம் குறித்து எடுத்துக் கூறி, தாங்கள் வைத்துள்ள நிலத்தில் அரசு மானிய உதவியுடன் கால்நடை தீவன சோளம் பயிரிட்டு, கால்நடைகளுக்கு தேவையான உணவு உற்பத்தியை பெருக்கிக் கொள்ள அறிவுறுத்த வேண்டும் என்றார்.

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜி.வெங்கடேசன், உதவி இயக்குநர்கள் எம்.தங்கராஜ் (ஈரோடு), டி.பழனிசாமி (கோபி), கால்நடை பெருக்க மற்றும் தீவன அபிவிருத்தி உதவி இயக்குநர் ஏ.முருகன் உள்பட கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவர்கள், அலுவலர்கள், ஊராட்சித் தலைவர்கள், துணைத் தலைவர்கள், கால்நடை வளர்ப்போர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு ரூ.16.72 லட்சம் வறட்சி நிவாரணம்

பைசுஹள்ளி, கொளகத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 655 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.16.72 லட்சம் வழங்கப்படவுள்ளது.

தருமபுரி மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அந்தந்த பயிர்களுக்கு தகுந்தபடி நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

நிவாரணத் தொகை அந்தந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களுக்கும் இழப்பீடு தொகை வரப்பெற்றுள்ளது.

தருமபுரியை அடுத்துள்ள பைசுஹள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில், 191 விவசாயிகளுக்கு ரூ.5 லட்சத்து 4 ஆயிரத்து 527 வழங்கப்படவுள்ளது.

பருத்தி, கரும்பு, பயறு வகை பயிர்களை பயிரிட்டிருந்த விவசாயிகளுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும். மொத்தம் 157 ஏக்கர் பரப்பில் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பது கணக்கிடப்பட்டு இந்த நிவாரணம் வழங்கப்பட்டது.

சங்க அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைகளை தலைவர் எம். வேலன் வழங்கினார். துணைத் தலைவர் கே. சிங்காரவேல், செயலர் எம். பழனி மற்றும் இயக்குநர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கொளகத்தூர்: இதேபோல, கொளகத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் மல்லிக்குட்டை, கே.நடுஹள்ளி ஊராட்சிகளைச் சேர்ந்த 464 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக வழங்க ரூ.11.68 லட்சம் வரப்பெற்றுள்ளது.

சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு உடனடியாகவும், உறுப்பினர் அல்லாதவர்களுக்கு கட்டணமின்றி வங்கிக் கணக்கு தொடங்கி உறுப்பினராக சேர்த்து இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என சங்கச் செயலர் சி. சித்தன் தெரிவித்தார்.

வியாழக்கிழமை சங்கத்துக்கு வந்திருந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கினார். சங்கத் தலைவர் எஸ். மாதையன் மற்றும் இயக்குநர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## முட்டை விலை மேலும் 12 காசுகள் உயர்வு

பொதுமக்களிடையே முட்டைக்கான நுகர்வு அதிகரித்து வருவதை அடுத்து, நாமக்கல் மண்டலத்தில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு வருகிறது. கடந்த புதன்கிழமை 7 காசுகள் உயர்த்தப்பட்ட நிலையில், வியாழக்கிழமை மேலும் 12 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.02ஆக நிர்ணயிக்கப்பட்டது.

தமிழகம், புதுச்சேரி பகுதி வங்கக் கடலில் மீன்பிடி தடை காலம் அமலில் இருந்ததாலும், நாடு முழுவதும் நிலவிய வெயிலின் தாக்கம் காரணமாகவும் முட்டை நுகர்வில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், முட்டை விலையும் குறைக்கப்பட்டு கடந்த 6-ஆம் தேதி ரூ.2.60ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

பிறகு, வட மாநிலங்களில் கடைப்பிடிக்கப்பட்ட ஆசாட விரதம் முடிவுக்கு வந்ததை அடுத்து, அங்கு முட்டை நுகர்வு அதிகரிக்கத் தொடங்கியது.

இதனால், வட மாநிலங்களில் முட்டை விலை உயர்ந்ததை அடுத்து, நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டு வருகிறது.

அதன்படி, முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை புதன்கிழமை ஒரே நாளில் 7 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.2.90ஆக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர், வியாழக்கிழமை மேலும் 12 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.02ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த விலை மேலும் உயரக்கூடும் என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது.

பிற மண்டலங்களில் நிலவும் விலை: சென்னை-ரூ.3, பெங்களூர்-ரூ.2.85, மைசூர்-ரூ.2.87, ஹைதராபாத்-ரூ.2.48, மும்பை-ரூ.2.82, விஜயவாடா-ரூ.2.55, கொல்கத்தா-ரூ.3.10, பர்வாலா-ரூ.2.53, தில்லி -ரூ.2.63.

## வறட்சியால் பாதிப்பு: நெல் சாகுபடி இலக்கு குறைப்பு

பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சியை அடுத்து, நாமக்கல் மாவட்டத்தில் கடந்த நிதியாண்டில் நெல் சாகுபடி வெகுவாக குறைந்தது. இதனால், நிகழ் நிதியாண்டில் நெல் சாகுபடி இலக்கு கடந்தாண்டைக் காட்டிலும் குறைக்கப்பட்டுள்ளது. தவிர, சாகுபடியை மேம்படுத்த பல்வேறு மானியத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தின் பயிர் சாகுபடி பரப்பு 1.60 லட்சம் ஹெக்டேரில் கிழக்குக் கரை கால்வாய், மோகனூர், குமாரபாளையம் கால்வாய்கள் மற்றும் ராஜ வாய்க்கால் ஆகியவை மூலம் பள்ளிபாளையம், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், மோகனூர் பகுதிகளில் மட்டும் சுமார் 20 ஆயிரம் ஹெக்டர் கால்வாய் பாசனம் நடைபெறுகிறது. மற்ற பகுதிகளில் மழை மற்றும் கிணறுகளை நம்பியே பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

நாமக்கல் மாவட்டத்தின் சராசரி மழையளவு 776 மில்லி மீட்டராகும். கடந்த ஆண்டில் பருவமழை பொய்த்து 486.1 மி.மீ. மட்டுமே மழை பெய்ததால் மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் 1000 அடிக்கு கீழே சென்று மானாவாரி நிலங்களில் பயிர் சாகுபடி முழுமையாக பாதிப்படைந்தன. தவிர, மேட்டூர் அணையிலிருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படாததால், கிழக்குக் கரை கால்வாயை நம்பி நடைபெறும் சுமார் 4 ஆயிரம் ஹெக்டர் பாசனம் அடியோடு பாதிக்கப்பட்டது.

இதனடிப்படையில், கடந்த 2012-2013ஆம் ஆண்டு தொடக்கத்தில் 27 ஆயிரம் ஹெக்டர் நெல் சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், ஆண்டிறுதியில் 79 சதம் சரிந்து 5,545 ஹெக்டர் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும், 8,123 ஹெக்டர் குறைவாகும். இதனால், மாவட்டம் முழுவதும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட சாகுபடி பரப்பு பெருமளவில் குறைந்ததை அடுத்து, நிகழ் நிதியாண்டுக்கான (2013-2014) நெல் சாகுபடி இலக்கும் வெகுவாக குறைக்கப்பட்டு 17,000 ஹெக்டராக நிர்ணயிக்கப்பட்டது.

இதேபோல, கரும்பு பயிருக்கான இலக்கு 2012-2013ஆம் ஆண்டில் 23,700 ஹெக்டராக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், நிகழாண்டில் 19,000 ஹெக்டராக குறைக்கப்பட்டது. ஆனால், சிறு தானியங்கள் 78,000 ஹெக்டரும், பருத்தி 3,300 ஹெக்டரும் என கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட அளவே இந்த ஆண்டும் நிர்ணக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இந்தப் பயிர் சாகுபடி இலக்கை நிறைவு செய்ய பல்வேறு மானியத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அதில், முக்கியத் திட்டமாக மாவட்டம் முழுவதும் மானிய விலையில் 1000 பண்ணைக் குட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தவிர, சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் உள்ளிட்டத் திட்டங்களுக்கும் கூடுதலாக மானியங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வேளாண் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

## ஒசூரில் பலத்த மழை

ஒசூர் வட்டாரத்தில் புதன்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. தளி அருகே இடி தாக்கியதில் மூன்று மாடுகள் உயிரிழந்தன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர், தேன்கனிக்கோட்டை, தளி உள்ளிட்ட பகுதிகளில் புதன்கிழமை இரவு பலத்த காற்று, இடி, மின்னலுடன் மழை பெய்தது. சில இடங்களில் விடிய, விடிய தூரல் மழை நீடித்தது.

தேன்கனிக்கோட்டை, தளி பகுதியில் பலத்த காற்றில் மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால், மின்சாரம் தடைபட்டது.

மாவட்டத்தில் அதிகபட்சமாக தளியில் 60 மில்லி மீட்டர் மழை பதிவானது. ராயக்கோட்டையில் 59 மி.மீ, தேன்கனிக்கோட்டையில் 39 மி.மீ, ஒசூரில் 37 மி.மீ, சூளகிரியில் 22 மி.மீ, அஞ்செட்டியில் 11 மி.மீ மழையும் பதிவாகின.

ஒசூரில் பலத்த மழையால் புதன்கிழமை இரவு தடைபட்ட மின்சாரம் வியாழக்கிழமை காலை சீரானது.

3 மாடுகள் சாவு: தளி அருகே உள்ள உளிவீரனப்பள்ளியில் அசோக்குமார் என்பவரின் மூன்று மாடுகள் புதன்கிழமை இரவு பெய்த மழையின் பொது இடி, மின்னல் தாக்கியதில் உயிரிழந்தன.

நீர்வரத்து அதிகரிப்பு: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் கெலவரப்பள்ளிக்கு அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 416 கன அடியாக இருந்தது. அணையின் நீர்மட்டம் 41 அடியை தாண்டியது. அணையில் இருந்து வினாடிக்கு 320 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## ஊத்தங்கரை அருகே விளைநிலங்களில் யானைகள் அட்டகாசம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகே விளைநிலங்களில் புகுந்த காட்டு யானைகள் கரும்பு, வாழைத் தோட்டங்களை சேதப்படுத்தின.

திருவண்ணாமலை மாவட்டம், மேல்சங்கம் வனப் பகுதியிலிருந்து செவ்வாய்க்கிழமை இரவு 6 யானைகள் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வனப் பகுதிக்குள் நுழைந்தன.

இந்த யானைகள் தொடர்ந்து அந்தப் பகுதியில் முகாமிட்டு விவசாயப் பயிர்களை சேதப்படுத்தி வந்தன.

புதன்கிழமை இரவு காட்டை விட்டு வெளியேறிய யானைகள், சாமியார் கொட்டாய் அருகேயுள்ள நாரசம்பட்டிக்குள் நுழைந்தன. அங்கு மணி என்பவரின் கரும்புத் தோட்டத்தில் புகுந்து சுமார் ஓர் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த கரும்புகளை சேதப்படுத்தின. அதேபோல, தர்மலிங்கம் என்பவரின் வாழைத் தோட்டத்தில் புகுந்து சுமார் 100 வாழைகளை சேதப்படுத்தின.

மேலும், பாலுவின் கம்புத் தோட்டத்தில் புகுந்து பயிர்களை சேதப்படுத்திய யானைகள், அருகிலிருந்த சையத்பாஷாவின் வீட்டின் முன்பிருந்த சுற்றுச் சுவரை இடித்து தரைமட்டமாக்கின.

பின்னர், வியாழக்கிழமை காலை மீண்டும் யானைகள் வனப் பகுதிக்குள் சென்றன.

இந்த நிலையில், வியாழக்கிழமை இரவு 5 யானைகள் தனியாகப் பிரிந்து ஊத்தங்கரை மகளிர் மேல்நிலைப் பள்ளி அருகே வந்தன. மற்றொரு யானைத் தனியாக பிரிந்து சாமியார்கொட்டாய் பகுதிக்குள் சென்றது.

இதில் 5 யானைகள் எந்த நேரமும் ஊத்தங்கரை நகருக்குள் வரக்கூடும் என்பதால், வனவர் நீலகண்டன் தலைமையில் 15-க்கும் மேற்பட்ட வன ஊழியர்கள் தொடர்ந்து யானைகளை கண்காணித்து வருகின்றனர்.

மேலும், வன ஊழியர்கள் பட்டாசு வெடித்தும், தீப் பந்தங்களை எரியூட்டியும் யானைகள் வனப் பகுதிக்குள் விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யானைகள் இரையைத் தேடி தொடர்ந்து இரவு நேரத்தில் வனப் பகுதிக்குள் இருந்து கிராமங்களுக்குள் வருவதால், அந்தப் பகுதி பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

## அரியலூரில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (மே 24) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் காலை 11 மணியளவில், மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம்.

## வறட்சி நிவாரண தீவனச் சோளம், நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம் ஆய்வு

கரூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் பயிரிடப்பட்டுள்ள டெல்டா மாவட்ட தீவனச் சோளப் பயிர், நாட்டுக் கோழி வளர்ப்பு ஆகிய திட்டங்களை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி அண்மையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கரூர் மாவட்டத்தில் 700 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள டெல்டா மாவட்ட வறட்சி நிவாரண தீவனச் சோளப் பயிர், மணவாடி ஊராட்சி பெருமாள்பட்டியில் நாட்டுக் கோழி வளர்ப்புப் பண்ணை ஆகியவற்றை ஆய்வு செய்த ஆட்சியர் ச. ஜெயந்தி பின்னர் கூறியது:

டெல்டா மாவட்ட வறட்சி நிவாரண தீவனச் சோளப் பயிர் சாகுபடி செலவினமாக ரூ. 13,600-ல் 50சத அரசு மானியமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 6,800 வழங்கப்பட உள்ளது. மேலும் 526 ஏக்கர் பரப்பளவில் கோ 3 அல்லது கோ 4 பசுந்தீவனப் பயிர் சாகுபடி செய்ய 0.25 ஏக்கருக்கு முழு அரசு மானியம் ரூ. 3 ஆயிரம் வழங்கப்படவுள்ளது. கரூர் மாவட்டத்தில் 2012-13-ம் ஆண்டில் 35 பேருக்கு 50 சத மானியத்தில் நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டம் ரூ. 20.4 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 2013-14-ம் ஆண்டில் 240 பயனாளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது என்றார்.

## உழவர் பெருவிழாவில் மானிய விலையில் வேளாண்கருவி

ஆலங்குடி அருகேயுள்ள சேந்தன்குடியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உழவர்பெருவிழாவில் மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் ராம. சிவக்குமார் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஞான. கலைச்செல்வம், ஊராட்சித் தலைவர் ம. கலையரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரைதனசேகரன், மானிய விலையில் களைஎடுக்கும் கருவியை வழங்கினார். நிகழ்ச்சியில் வேளாண், தோட்டக்கலை, பொதுப்பணி மற்றும் வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் பேசினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் செய்தனர்.

## அரசு வேளாண் பண்ணைகளில் இயக்குநர் ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அரசு வேளாண் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டப்பணிகளை வேளாண் இயக்குநர் எம். ராஜேந்திரன் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் ஸ்டாமின் பயிற்சி வளாகம், நுண்ணூட்ட கலவை மையம், உயிர் உரங்கள் உற்பத்தி மையம், மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம், அண்ணாபண்ணை, வம்பன் பயறுவகை ஆராய்ச்சி மையம், வம்பன் அறிவியல் நிலையம் மற்றும் வம்பன் பயறு பெருக்கப்பண்ணை ஆகிய பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

குடுமியான்மலை வளாகத்தில் அண்ணாபண்ணையில் நடைபெறும் வேளாண் பணிகளை பார்வையிட்டு பண்ணையின் முன்னேற்றம் குறித்தும்,  அங்கு பயிரிடப்பட்டுள்ள உளுந்து விதைப் பண்ணை வயலையும் ஆய்வு செய்தார்.

இதையடுத்து ஸ்டாமின் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் பயிற்சிகள், பயிற்சி அரங்குகள் மற்றும் விடுதிகளையும் பார்வையிட்டார். நுண்ணூட்ட கலவை தயாரிக்கும் பணிகள், உயிர் உர உற்பத்தி மையம் மற்றும்  மண் ஆய்வு பரிசோதனை நிலையம், உயிர் உரங்கள் உற்பத்தி செய்யும் பணிகள், மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகத்தையும் பார்வையிட்டார்.

இதையடுத்து, வம்பன் பயறு பெருக்கப்பண்ணையில் நடவு முறையில் துவரை சாகுபடி செய்துள்ள வயலையும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மூலம் அமைக்கப்பட்டுள்ள சொட்டுநீர் பாசன வயல்களை பார்வையிட்டார்.   தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலைய பணிகளையும், வேளாண் அறிவியல் நிலைய பணிகளையும் பார்வையிட்டு வேளாண் விஞ்ஞானிகளிடம் கலந்துரையாடினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வேளாண் இயக்குநரை வரவேற்று மாவட்டத்தில் வேளாண் துறையில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து விளக்கிக் கூறினார்.

இதையடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழா நிகழ்ச்சிகள் குறித்தும், அதன் மூலம் விவசாயிகளுக்கு கிடைத்துள்ள பலன்கள் குறித்தும், வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறையில் பாராம்பரிய வேளாண் பொருட்களின்  முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், வம்பன் வேளாண் அறிவியல் நிலைய பணிகளையும் குடுமியான்மலையில் நடைபெறும் டிப்ளமோ அக்ரி கல்லூரி பணிகள் குறித்தும் வேளாண் இணை இயக்குநர் பி. எம்பெருமாள், வேளாண் வணிக துணை இயக்குநர் ந. அண்ணாமலை, வம்பன் விதை சுத்திகரிப்பு நிலைய பணிகளை விதைச்சான்று உதவி இயக்குநர் வைத்தியநாதன், வம்பன் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் வைரவன், கல்லூரி முதல்வர் ஜெயராமன் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

ஆய்வின்போது, கூடுதல் வேளாண் இயக்குநர்(பொ) கணேசன், வேளாண் துணை இயக்குநர்கள் (மாநிலத்திட்டம்) கா. பாலன்,(மத்தியத்திட்டம்) ஆர்.  சதானந்தம், ஸ்டாமின் துணை இயக்குநர்கள் கதிரேசன், வெப்0ளைச்சாமி, வேளாண்மை உதவி இயக்குநர் திருப்பதி வேளாண்மை அலுவலர்கள் ஆர். ஜெகதீஸ்வரி, எஸ். ராஜசேகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அளிப்பு

பொன்னமராவதி பொன்புதுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் வியாழக்கிழமை விவசாயிகளுக்கு தமிழக அரசின் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு சங்கத்தின் தலைவர் அ. அம்பி தலைமை வகித்தார். வட்டார கள அலுவலர் எஸ். சீனியப்பா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் 772 நபர்களுக்கு ரூ. 17.80 லட்சம் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டது. சங்கப் பணியாளர்கள் டி. பாலசுப்பிரமணியன்,பி. கருப்பையா, எம். தமிழரசி, மற்றும் இயக்குநர் சட்டையப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, துணைத்தலைவர் டி. அடைக்கன் வரவேற்றார். செயலர் டிஆர். சண்முகசுந்தரம் நன்றி கூறினார்.

### "குறுவைக்கு பதிலாக உளுந்து சாகுபடி செய்யலாம்'

தண்ணீர் போதுமான அளவில் இல்லாததால், குறுகிய கால பயிர்களான உளுந்து, பச்சை பயறு வகைகளை சாகுபடி செய்யலாம் என்றார் காவிரி டெல்டா ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் தலைவர் காவேரி எஸ். ரெங்கநாதன். தண்ணீர் போதுமான அளவில் இல்லாததால், குறுகிய கால பயிர்களான உளுந்து, பச்சை பயறு வகைகளை சாகுபடி செய்யலாம் என்றார் காவிரி டெல்டா ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் தலைவர் காவேரி எஸ். ரெங்கநாதன்.

கும்பகோணம் ரோட்டரி சங்கம் சார்பில், வாழ்நாள் சாதனையாளர் விருது மன்னார்குடி எஸ். ரெங்கநாதனுக்கு புதன்கிழமை இரவு வழங்கப்பட்டது.

முன்னதாக, கும்பகோணத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தற்போதைய காலகட்டத்தில் பருவமழை இன்னும் தொடங்கவில்லை. அதற்கான அறிகுறியும் இல்லை. மேட்டூர் அணையில்  தண்ணீர் இல்லை. வரும் ஜூன் மாதத்தில் காவிரி டெல்டாவில் குறுவை சாகுபடி இருக்குமா என்பது சந்தேகம்.

தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால், குறுவை சாகுபடி வேண்டாம் என வேளாண் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதை விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக குறுவை சாகுபடி காலத்தில் குறுகிய கால பயிர்களான 65 -லிருந்து 80 நாள்களுடைய உளுந்து, பச்சை பயறு ஆகியவற்றை சாகுபடி செய்யலாம். ஜூன் 12 -ம் தேதி மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படும். அதாவது பருவமழை மே மாதம் 31 -ம் தேதி தொடங்கும். அந்த மழைநீர் மேட்டூருக்கு பத்து நாளில் வந்து சேரும். ஆகையால் தான் ஜூன் 12 -ம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம். இதுதான் ஜூன் 12 -ன் சூட்சமம்.

அதேபோல், சாகுபடியெல்லாம் முடிந்து ஜனவரி 28 -ல் தண்ணீர் நிறுத்தப்படும். இதுதான் வழக்கம். சம்பா சாகுபடி நேரத்தில் ஓரளவுக்கு மழையும், தண்ணீரும் கிடைத்தால் நாம் சம்பாவை மேற்கொள்ளலாம்.

காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என முதல்வரும், டெல்டா விவசாயிகளும் குரல் கொடுத்து வருகின்றனர். விரைவில் அவை ஏற்படுத்தப்படும் என நம்புகிறோம் என்றார் ரெங்கநாதன்.

**"குறுவைக்கு பதிலாக உளுந்து சாகுபடி செய்யலாம்**

தண்ணீர் போதுமான அளவில் இல்லாததால், குறுகிய கால பயிர்களான உளுந்து, பச்சை பயறு வகைகளை சாகுபடி செய்யலாம் என்றார் காவிரி டெல்டா ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் தலைவர் காவேரி எஸ். ரெங்கநாதன்.

கும்பகோணம் ரோட்டரி சங்கம் சார்பில், வாழ்நாள் சாதனையாளர் விருது மன்னார்குடி எஸ். ரெங்கநாதனுக்கு புதன்கிழமை இரவு வழங்கப்பட்டது.

முன்னதாக, கும்பகோணத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தற்போதைய காலகட்டத்தில் பருவமழை இன்னும் தொடங்கவில்லை. அதற்கான அறிகுறியும் இல்லை. மேட்டூர் அணையில்  தண்ணீர் இல்லை. வரும் ஜூன் மாதத்தில் காவிரி டெல்டாவில் குறுவை சாகுபடி இருக்குமா என்பது சந்தேகம்.

தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால், குறுவை சாகுபடி வேண்டாம் என வேளாண் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதை விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக குறுவை சாகுபடி காலத்தில் குறுகிய கால பயிர்களான 65 -லிருந்து 80 நாள்களுடைய உளுந்து, பச்சை பயறு ஆகியவற்றை சாகுபடி செய்யலாம். ஜூன் 12 -ம் தேதி மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படும். அதாவது பருவமழை மே மாதம் 31 -ம் தேதி தொடங்கும். அந்த மழைநீர் மேட்டூருக்கு பத்து நாளில் வந்து சேரும். ஆகையால் தான் ஜூன் 12 -ம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம். இதுதான் ஜூன் 12 -ன் சூட்சமம்.

அதேபோல், சாகுபடியெல்லாம் முடிந்து ஜனவரி 28 -ல் தண்ணீர் நிறுத்தப்படும். இதுதான் வழக்கம். சம்பா சாகுபடி நேரத்தில் ஓரளவுக்கு மழையும், தண்ணீரும் கிடைத்தால் நாம் சம்பாவை மேற்கொள்ளலாம்.

காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என முதல்வரும், டெல்டா விவசாயிகளும் குரல் கொடுத்து வருகின்றனர். விரைவில் அவை ஏற்படுத்தப்படும் என நம்புகிறோம் என்றார் ரெங்கநாதன்.

### வறட்சி நிவாரண நிதி: மாவட்ட ஊராட்சிக் கூட்டத்தில் முதல்வருக்குப் பாராட்டு

குமரி மாவட்டத்துக்கு வறட்சி நிவாரண நிதியாக ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து மாவட்ட ஊராட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட ஊராட்சிக் கூட்டம் அதன் தலைவர் சாரதாமணி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு செயலர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

துணைத் தலைவர் செல்லசாமி, உறுப்பினர்கள் தர்மராஜ், சசியோன், ஜேக்கப்சதா, தாணுபிள்ளை, ஜான்சிலின் விஜிலா, சுப்பையா, துளசீதரன், ஜெயச்சந்திரன், கிரிஜா, மேரி ஏஞ்சல்ரீத் ஆகியோர் கலந்து கொண்டனர். தீர்மானங்கள்: குமரி மாவட்டத்துக்கு வறட்சி நிவாரண நிதியாக ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்த தமிழக முதல்வருக்கும், மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக மாவட்ட ஆட்சியருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் உள்ள மின்கம்பங்களை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளான ஆறுகள், குளங்கள் ஆகியவற்றில் தூர்வாரும் நடவடிக்கைகளை கோடைக் காலம் முடியும் முன் போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும்.

தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராத 4-வது வார்டு உறுப்பினர் சி. தர்மராஜ், இப்போது நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டதால், அவர் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை கைவிடவும், மாநில நிதிக்குழு மானிய திட்டத்தில் பெறப்பட்ட ரூ.1.40 கோடிக்கான குடிநீர் திட்டப் பணிகளை தேர்வு செய்யவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்

24.05.2013 A.M

## பருவ மழையை தொடர்ந்து கோடைமழையும் ஏமாற்றம் : மாவட்டத்தில் வறட்சி மேலும் தீவிரமடையும் நிலை

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில், தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகளை தொடர்ந்து, கோடை மழையும் ஏமாற்றியதால் விவசாயிகள் செய்தறியாது உள்ளனர். குடிநீருக்கும் மக்கள் திண்டாடி வருகின்றனர்.

சென்ற ஆண்டு பருவத்தில் பெய்யவேண்டிய தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகள் ஏமாற்றியதால், விவசாயம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியது.

இதை தொடர்ந்து தற்போது தண்ணீர் பிரச்னை மாவட்டம் முழுவதும் ஏற்பட்டுள்ளது. நிலத்தடிநீர் மட்டம் வெகுவாக குறைந்ததால் இறவை பாசன விவசாயமும் செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

ஆழ் குழாய் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்ததால், குடிநீர் அல்லாத பிற தேவைகளுக்கு தண்ணீர் கிடைப்பது மிகவும் சிக்கலில் உள்ளது.

கிராமமக்கள் குடிநீரை தேடி அலையும் நிலை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் காணப்படுகிறது.

2012ல் கோடை பருவமான மார்ச், ஏப்., மே மாதங்களில் முறையே 3, 46.3, 59.3 மி.மீ., மழை பதிவாகியது. இந்த ஆண்டு கோடை பருவத்தில் மார்ச்- 29.8, ஏப்.,-26.1, மே-19.25 மி.மீ., மட்டுமே மழை பதிவாகியுள்ளது.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கோடை மழை 34 மி.மீ., குறைவாக பெய்துள்ளது.

வழக்கமாக மாவட்டத்தில் கோடை மழை 275 மி.மீ., பெய்யவேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக சராசரி மழை அளவில் பாதி கூட கோடைமழை பெய்யவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்.

தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகளை தொடர்ந்து கோடைமழையும் மாவட்டத்தில் ஏமாற்றத்தை தந்துள்ளதால், நீர்நிலை ஆதாரங்கள், குளம், கண்மாய்கள், அணைகள் வறண்டு வறட்சியின் தாக்கம் மேலும் தீவிரமடையும் நிலை உள்ளது.

## வரத்து குறைவால் களையிழந்த ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்

ஒட்டன்சத்திரம் : வறட்சி காரணமாக, காய்கறி உற்பத்தி வீழ்ச்சி அடைந்ததால், ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட் களையிழந்து காணப்பட்டது.

உள்ளூர் மற்றும் வெளியூர் பகுகளில் விளையும் காய்கள் இங்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகிறது.

சனிக்கிழமை தவிர்த்து மற்ற நாட்களில் காய்கள் தினசரி ஏலம் விடப்படுகிறது. வியாபாரிகளுக்கு தேவையான காய்கள் தரமாக கிடைப்பதால் வியாபாரிகள் அதிகம் வருகின்றனர். குறிப்பாக கேரள வியாபாரிகள் காய்களை அதிகமாக வாங்குவதால், மூன்றில் 2 பங்கு காய்கள் அந்த மாநிலத்திற்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

தொடர்ச்சியாக மழையில்லாததால், நீர் நிலைகளில் சொற்ப அளவிற்கே நீர் உள்ளது. இதனால் ஒட்டன்சத்திரம் பகுதியில் காய்கறி உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது. இருக்கும் நீரை பயன்படுத்தி, குறைந்த பரப்பில் மட்டுமே காய்கறி உற்பத்தி செய்யப்படுகிறது. இதன்காரணமாக மார்க்கெட்டில் காய்கறி வரத்து மிகவும் குறைந்து விட்டது.

காலை 7 மணியில் தொடங்கி நள்ளிரவுக்கும் மேல் சுறுசுறுப்புடன் செயல்படும் மார்க்கெட் தற்போது களையிழந்து காணப்படுகிறது. சில மாதங்களுக்கு முன்பு வரை வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில், அதிக வரத்து காரணமாக ரோட்டுப் பகுதியிலேயே காய்கள் இறக்கப்பட்டதால், போக்குவரத்து பாதிக்கப்படுவது தொடர்கதையாக இருந்தது. தற்போது அந்த பிரச்னை இல்லை.

கமிஷன் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில்,"" சில மாதங்களுக்கு முன் வரை ஒரு கடைக்கு, நாள் ஒன்றுக்கு 500 பெட்டி வரை தக்காளி வந்தது, தற்போது இதன் எண்ணிக்கை 100க்கும் குறைவாகவே உள்ளது, '' என்றார்.

## தொடர் மழை இல்லை: உதிர்கிறது மா பிஞ்சுகள்

ராஜபாளையம் : ராஜபாளையம் பகுதியில் போதிய மழை பெய்யாமல், எப்போதாவது பெய்வதால், மா பிஞ்சுகள் உதிர்ந்துவிடுகின்றன. கடைசி நேரத்தில் இழப்பு ஏற்படுவதாக, மா விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதிகளில், சப்பட்டை, பஞ்சவர்ணம் போன்ற மாம்பழங்கள் விளைகின்றன. மழை இல்லாததால், கிணற்று பாசனம் மூலம் விவசாயம் நடைபெற்றது. மார்க்கெட்டில் கிலோ 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டாலும், விவசாயிகளுக்கு கிலோ 20 ரூபாய் தான் கிடைக்கிறது.

வைகாசியில் காற்று அடிக்கும்போது, சதைபிடிப்பு உள்ள மாம்பழங்கள் கிடைக்கும். இந்த பழங்கள், கேரளா மற்றும் தமிழகத்தின் பல மாவட்டங்களுக்கும் அனுப்பப்படும்.

தற்போது எப்போதாவது மழை பெய்கிறது. இந்த மழை, மண்ணை குளிர்விக்காமல், மண்ணின் உஷ்ணத்தை கிளப்பிவிடுவதால், மாம்பிஞ்சுகள் உதிர்கின்றன.

விவசாயி முருகன், ""தொடர்மழை பெய்தால், மா இலைகளில் உள்ள தேன்நோய் கட்டுப்படும். இந்த மழையின் மூலம், மண் குளிரும்போது, பிஞ்சுகள் வளர்ச்சி நன்றாக இருக்கும். வைகாசியில் சுவையான மாம்பழம் கிடைக்கும்.

கடந்த பல நாட்களாக, எப்போதாவது மழை பெய்வதால், பிஞ்சுள் உதிர்கின்றன," என்றார்.

## கெலவரப்பள்ளி அணை நீர்மட்டம் உயர்வு பாசனத்துக்கு ஜூலையில் தண்ணீர் திறக்க வாய்ப்பு

ஓசூர்: கர்நாடகா மாநிலம், மற்றும் ஓசூர் தென்பெண்ணையாற்று படுகையில் பெய்து வரும் மழையால், கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. நடப்பாண்டு, திட்டமிட்டபடி ஜூலையில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. ஓசூர் தாலுகாவில் மட்டும் கோடை மழை ஏமாற்றி வந்தது. அதனால், ஓசூர் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் பாதாளத்திற்கு சென்று, கடும் குடிநீர் மற்றும் விவசாய பாசன நீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. கர்நாடகாவில், தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் கடந்த வாரம் பெய்த மழையில், தென்பெண்ணை ஆற்றில் நீர் வரத்து அதிகரித்து, ஓசூர் கெலவரப்பள்ளி அணை நிரம்பியது. இதனால், அணையில் இருந்து கே.ஆர்.பி., அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. நேற்று முன்தினம் இரவு, ஓசூர் தாலுகாவில் இரவு, 8.30 மணிக்கு துவங்கிய மழை, 10.30 வரை நீடித்தது. பாகலூர், பேரிகை, சூளகிரி, உத்தனப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் நல்ல மழை பெய்தது. ஓசூர் டவுனில், சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. தார் சாலைகளில் அரிப்பு ஏற்பட்டு, சாக்கடை நீர் மழைநீருடன் கலந்து சென்றதால் கடும் துர்நாற்றம் வீசியது. ஓசூர் நகராட்சி அலுவலகத்தில் மழை நீர் புகுந்து தேங்கியது.

நேற்று காலை நகராட்சி ஊழியர்கள், அலுவலகத்தில் புகுந்த தண்ணீரை வெளியேறி சுத்தம்

செய்தனர். மாவட்டத்தில் அதிகப்பட்சமாக தளியில், 60 மி.மீ., ஓசூர் 37, ராயக்கோட்டை 59, தேன்கனிக்கோட்டை 38, சூளகிரியில் 22, கிருஷ்ணகிரி 12.20, பாரூர் 4.60, அஞ்செட்டி 11, பெனுகொண்டபுரம் 12.40, நெடுங்கல்லில் 3.60 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

மாவட்டம் முழுவதும் மொத்தம், 262.20 மி.மீ., மழையும், சராசரியாக, 21.85 மி.மீ., மழையும் பெய்ததுள்ளது. கோடையையொட்டி, ஓசூர் நகரில் வெயில் சுட்டடெரித்து வந்த நிலையில் நேற்று முன்தினம்இரவு பெய்த மழையால் புழுக்கம் குறைந்து குளிர்ந்த காற்று வீசதுவங்கியுள்ளது. கர்நாடகா மற்றும் ஓசூர் தென்பெண்ணை ஆற்று நீர் பிடிப்பு பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு நல்ல மழை பெய்தது. அதனால், தென்பெண்ணை ஆற்றில் நேற்று நீர் வரத்து அதிகரித்தது. ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நேற்று வினாடிக்கு, 416 கன அடி தண்ணீர் வந்தது.

அணையின் நீர் மட்டம், 41.33 அடி ஆகும். அணையில் இருந்து கே.ஆர்.பி., அணைக்கு நேற்று காலை, வினாடிக்கு, 320 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கெலவரப்பள்ளி அணை இந்த கோடையிலும் நிரம்பியுள்ளதால், திட்டமிட்ப்படி வரும் ஜுலை மாதம் அணை பாசனப்பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், ஓசூர் கெலவரப்பள்ளி அணை பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கோழியின உற்பத்தி தொழில் நுட்ப படிப்புக்கு விண்ணப்பம் வினியோகம்

ஓசூர்: "ஓசூர், மத்திகிரி கால்நடை பண்ணையில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், கோழியின உற்பத்தி தொழில் நுட்ப படிப்புக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுகிறது.

மத்திகிரி கால்நடை பண்ணை இயக்குனர் முருகன் வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் நடப்பாண்டு முதல் புதிதாக கோழியின உற்பத்தி தொழில்நுட்ப படிப்பை (ஆ.கூனுஞ்ட., கககூ)துவங்கியுள்ளது. ஓசூர் மத்திகிரி கால்நடை பண்ணையில் நடப்பாண்டு புதிதாக துவங்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையத்தில் கோழியின உற்பத்தி தொழில்நுட்ப வகுப்புகள் நடக்கிறது.

இதில், ப்ளஸ் 2 கணிதம், வேதியில், உயிரியியல், கணிதம் பாடப்பிரிவுகளில் படித்தவர்கள் சேரலாம். மிகுந்த அளவிலான மாணவர் சேர்க்கையும், மிக குறைந்த கல்வி கட்டணமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெருகி வரும் கோழியின வர்த்தக்கத்தில் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற மனித வள தேவைகளை பூர்த்தி செய்யவே, வேலைவாய்ப்பு மிக்க இந்த புதிய பட்டப்படிப்பு துவங்கப்பட்டுள்ளது. மேலும் தகவல் அறிய மற்றும் விண்ணப்பங்கள் பெற, "இயக்குனர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையம், மத்திகிரி, ஓசூர்' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பெற வரும், 31ம் தேதி கடைசி நாளாகும். பூர்த்தி செய்த விண்ணபங்கள் ஜூன், 3ம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு 94891 47179, 98439 08424 ஆகிய மொபைல்ஃபோன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அழியும் பாக்கு மட்டை தட்டு தொழில்: ஆர்டர் தர உற்பத்தியாளர்கள் எதிர்பார்ப்பு

ஈரோடு: சுயலாபத்துக்காக பாக்கு மட்டை தட்டுக்களை ஒதுக்கும், மண்டப கான்டிராக்டர்களால், பாக்கு மட்டை தொழில் நலிவடைந்து வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் மின்வெட்டு, மழையின்மையால் பல்வேறு தொழில்கள் நலிவடைந்து வருகிறது. இம்மாவட்டத்தில் சில ஆண்டுக்கு முன், பாக்கு மட்டை தயாரிப்பு தொழில் தோன்றியது. குறைந்த முதலீட்டில், அதிக லாபம் என்ற நோக்கில், பாக்கு மட்டை தொழில் உருவானதால், பெரும்பாலானோர் அத்தொழிலில் ஈடுபட்டனர். சில ஆண்டாக பாக்கு மட்டை தட்டு தயாரிப்பு தொழில், அழிவின் பாதையை நோக்கி பயணிக்கிறது.

இதுபற்றி, பாக்குமட்டை தயாரிப்பாளர்கள் கூறியதாவது:

குறைந்த முதலீட்டில் அதிக லாபம் என விளம்பரம் செய்யப்பட்டதால், பாக்குமட்டை அட்டை தொழிலில் ஈடுபட்டோம்.

ஆனால், இத்தொழிலில் எந்த லாபமும் இல்லை. கர்நாடகாவில் இருந்து, பாக்கு மட்டையை வாங்கி வந்து, ஊறவைத்து, ஹூட் மிஷினில் பதமாக வைத்து, பல்வேறு விதமான தட்டுக்களை தயாரித்து வருகிறோம்.

எட்டு சைஸ் தட்டுக்கள், 1.50 பைசாவுக்கும், பத்து சைஸ் தட்டுக்கள், 2.50 பைசாவுக்கும், 12 சைஸ் தட்டுக்கள், 3.50 பைசாவுக்கும் விற்பனை செய்கிறோம். ஒரு ஹாட் மிஷின் மூலம், ஒரு மணி நேரத்துக்கு, 500 தட்டுக்கள் வரை தயாரிக்கலாம் என போலி விளம்பரங்களால் நாங்கள் ஏமாந்தோம்.

ஒரு மிஷினில், ஒரு மணி நேரத்தில், 25 முதல், 30 தட்டுக்கள் வரை மட்டுமே தயாரிக்க முடியும்.

கர்நாடகாவில் வாங்கி வரும் பாக்கு மட்டைகள் உடைந்திருந்தாலோ, கிழிந்திருந்தாலோ, அதனை திரும்பி பெற்று கொள்வது கிடையாது. பல முறை கிழிந்தும், உடைந்தும் வரும், பாக்குமட்டைகளால் பெரும் நஷ்டம் அடைந்துள்ளோம்.

பெரும்பாலான திருமண மண்டபங்களில், பிளாஸ்டிக் தட்டுக்கள், இலைகளை பயன்படுத்த மட்டுமே அனுமதி உண்டு.

பாக்குமட்டை தட்டுக்களை உபயோகிப்பதால், குப்பைகள் அதிகரிப்பதாக கூறி, மண்டப உரிமையாளர்கள், பாதுகாவலர்கள், பாக்கு மட்டை தட்டை உபயோகிக்க தடை விதித்துள்ளனர். எனவே, பெரும்பாலான மண்டபங்களில், பாக்குமட்டை தட்டு உபயோகிப்பது கிடையாது.

கோவில்களில் மட்டும், எட்டு சைஸ் தட்டுக்கள், பிரசாதம் வழங்க பயன்படுத்துவதால், அவ்வகை தட்டுக்களின் விற்பனை மட்டும் நன்றாக நடக்கிறது.

கூடுதல் விலைக்கு வாழை இலை வாங்கி, பரிமாறுவதில் உணவு வீணாவதை தவிர்க்க, பாக்குமட்டை தட்டை வைத்து "பஃபே' முறையில் சாப்பிட்டால் செலவு குறையும்.

இம்மாதம், 30ம் தேதி வரை மட்டுமே, கர்நாடகாவில் பாக்கு மட்டை சீஸன் இருக்கும். அதன் பின், மழைக்காலம் துவங்குவதால், பாக்கு மட்டைகளில் அதிக பூஞ்சைகள் பரவும். எனவே, அடுத்த மாதம் முதல், பாக்கு மட்டை தட்டு உற்பத்தி வெகுவாக குறையும்.

பாக்கு மட்டை தட்டுக்களை பயன்படுத்த உள்ள தடையை, மண்டப உரிமையாளர்கள் நீக்க வேண்டும், என்றனர்.

## கோடையில் கைகொடுத்த வெண்டை விளைச்சல் அதிகரிப்பால் மகிழ்ச்சி

ஈரோடு: உபரி வருமானத்துக்காக பயிரிடப்பட்ட வெண்டைக்காய், கோடையில் கைகொடுத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் கரும்பு, வாழை, மஞ்சள், நெல் ஆகியவை அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

தவிர, விவசாயிகள் தங்கள் விளைச்சல் நிலங்கள் சாகுபடி செய்த நிலங்கள் போக மீதமுள்ள நிலத்தில் கைச்செலவுக்காகவும், உபரி வருமானத்துக்காகவும் காய்கறி செடிகளை வளர்ப்பது வழக்கம்.

ஈரோடு மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், விளைநிலங்கள் பலவும் வறண்டது. காய்கறிகளின் விலை உயர்ந்ததால், வறட்சியிலும், குறைந்த அளவு நீரில் விளையக்கூடிய, எள், கத்தரிக்காய், புடலங்காய், வெண்டைக்காய் ஆகியவற்றை விவசாயிகள் வளர்த்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம், வெள்ளோடு பகுதிகளில், ஏராளமான விவசாயிகள் வெண்டை, கத்தரிக்காயை அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி கிருஷ்ணன் கூறியதாவது:

என்னுடைய இரண்டு ஏக்கர் நிலத்தில், அரை நிலத்தில் வெண்டைக்காய் சாகுபடி செய்துள்ளேன். மற்ற பயிர்களை போல் அல்லாமல், குறைந்த அளவு நீர் பயன்பாட்டில் வெண்டை நல்ல விளைச்சலை தரும்.

ஏக்கருக்கு ஒரு கிலோ விதை விதைத்தால், 400 கிலோ வெண்டைக்காய் கிடைக்கும். இலைக்கு ஒரு காய் வீதம், செடிக்கு, 32 காய் காய்க்கும். வீட்டுக்கு தேவையான காய்கறிகள் போக, மீதமுள்ள காய்கறியை மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொடுத்து விடுவோம்.

கடந்த முறை கிலோ ஒன்றுக்கு, 25 ரூபாய் வரை வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

சில மாதமாக ஏமாற்றத்தை தந்த வெண்டைக்காய் சாகுபடி, தற்போது கோடையில் நல்ல லாபத்தை கொடுத்துள்ளது, என்றனர்.

## காய்கறி, பூக்கள் விலை உயர்வு நாள்தோறும் மக்கள் திண்டாட்டம்

திருச்சி: கடும் வறட்சி, முகூர்த்தம் காரணமாக காய்கறி, பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அதேசமயம் முகூர்த்தம் முடிந்தாலும் காய்கறி, பூ விலையில் பெரிய மாற்றமில்லாததால், பொதுமக்கள் திண்டாடி வருகின்றனர்.

எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு நடப்பாண்டு கடும் தண்ணீர் பஞ்சம் தமிழகத்தின் பெரும்பாலான பகுதியில் ஏற்பட்டுள்ளது. நீர் நிலைகள் ஓடிய பகுதிகளிலேயே கடுமøயான குடிநீர் தட்டுப்பாடு நிலவும் நிலையில், வானம் பார்த்த பூமி பகுதிகளை பற்றி கேட்கவே வேண்டாம். கந்தக பூமியான திருச்சி மாவட்டத்தில், துறையூர், உப்பிலியபுரம், மணிகண்டம், மணப்பாறை, வையம்பட்டி, துவரங்குறிச்சி போன்ற பகுதிகளில் கடும் குடிநீர் பஞ்சம் நிலவுகிறது. குறிப்பாக மணப்பாறை, வையம்பட்டி, துவரங்குறிச்சி போன்ற தோட்டப்பயிர்கள் அதிகம் விளைவிக்கப்படும் பகுதிகள். இப்பகுதியில் குடிநீருக்கே திண்டாட்டம் ஏற்பட்டுள்ள நிலையில், காய்கறி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், காய்கறி, பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தவிர, வைகாசி மாதத்தில், ஒன்பது முகூர்த்ததேதிகள் உள்ளது. இதில், நேற்று வரை நான்கு முகூர்த்தங்கள் நிறைவடைந்துள்ளன. திருமணம் போன்ற விஷேங்கள் நடத்துவோருக்காக மொத்தமாக காய்கறிகள், பூக்களை விலைக்கு வாங்கிச் செல்வதால், அவற்றின் விலை தாறுமாறாக உள்ளது.

இதுகுறித்து அனைத்து காய்கறி சில்லரை வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் செயலாளர் "மந்தை' ஜெகன், பொருளாளர் கமலக்கண்ணன் கூறியதாவது:

திண்டுக்கல்லில்லிருந்து அவரைக்காய், சவ்சவ், பாவற்காய், பீன்ஸ், மணப்பாறையிலிருந்து கத்திரிக்காய், வெண்டை, பாவற்காய், ஊட்டியிலிருந்து கேரட், பீட்ரூட், ஓசூரிலிருந்து பீன்ஸ், கோஸ் ஆகியவை திருச்சிக்கு வருகிறது. அனைத்து பகுதியிலும் வறட்சி காரணமாக விவசாயம் படுத்துவிட்டது.

இதனால், ஓசூரிலிருந்து 100 மூட்டை வரவேண்டிய பீன்ஸ், பத்து மூட்டை தான் வருகிறது. இதே நிலைதான் அனைத்து பகுதிகளிலும் நிலவுகிறது. இதனால், காய்கறிகளின் விலை உயர்வை கட்டுப்படுத்த முடியவில்லை. திருச்சியிலிருந்து தான் தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர் போன்ற பகுதிகளுக்கும் காய்கறி அனுப்பப்படுகிறது. அவரை, பீன்ஸ் அதிக விலை விற்கிறது. மாங்காய், முருங்கைக்காய் மட்டும் குறைவான விலையில் கிடைக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ காய்கறி மொத்தம் மற்றும் (அடைப்புக்குறியில்) சில்லரை விலையில் வருமாறு:

வெள்ளை முள்ளங்கி, மொத்தம் 10, (சில்லரை 15), நூக்கோல் 20, (25), ரிங் பீன்ஸ் 70, (75), சாதா பீன்ஸ், 40, (50), கேரட், 30, (40), பீட்ரூட், 25, (25-30), கோஸ் (தலையுடன்) 8, (15), உருளை 18, (20), வெண்டை, 20, (25), அவரைக்காய், 50, (60), சின்ன அவரை 40, கத்திரிக்காய், 25, (30), முருங்கைக்காய், 10, (15), சுரக்காய், 10, பீர்க்கங்காய், 15, (20), பூசணி, 6 பரங்கிக்காய், 8 தக்காளி 30 (40), தட்டக்காய் 20, சவ்சவ் 25, (30), பாவற்காய் 15, (20), சேனை 16, (20), கருணை 25, (30), சேப்பங்கிழங்கு 60, (80), புடலங்காய் 16, (20), சின்னவெங்காயம் 55, (65), பெரியவெங்காயம் 20, (25), கொத்தமல்லி, கட்டு, 30 புதினா, 15, மாங்காய், 10 ரூபாய்க்கு கிடைக்கிறது.

பூ விலை நிலவரம் ஒருகிலோவில் வருமாறு: மல்லி, 80, முல்லை, 120, கனகாம்பரம் 250, சம்பங்கி, 250, கேந்தி, 80, அரளி, 70, கோழிக்கொண்டை, 70, செவ்வந்தி, பட்டு ரோஸ் 120, ஊட்டி ரோஸ், 140, விச்சி, 130, மரிக்கொழுந்து, 30, மாசிப்பச்சை, 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

ராயப்பேட்டையிலிருந்து வரும், கேந்தி, செவ்வந்தி போன்ற பூக்கள் முற்றிலும் வரத்து இல்லை.

## கால்நடைக்கான இலவச மருத்துவ முகாம்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம் இன்று(24ம் தேதி) துவங்கி இரண்டு நாட்கள் நடக்கிறது.

தமிழகத்தில் வெண்மை புரட்சியை உருவாக்கவும், வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஏதுவாக அரசு சார்பில் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் தகுதியுடைய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கடந்த 2011-12ம் ஆண்டில் 800 கறவை மாடுகளும், 12 ஆயிரத்து 784 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. 20012-13ம் ஆண்டில் 900 கறவை மாடுகளும், 21 ஆயிரத்து 304 ஆடுகளும்

வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்டத்தில் பால் உற்பத்தி கணசமான அளவு உயர்ந்துள்ளது.

பெண்களின் வாழ்வாதாரமும் மேம்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஊக்குவிக்கும் விதமாக கால்நடைகளை சிறப்பாக பராமரித்துவரும் பயனாளிகளுக்கு பரசுகளும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிடையே கறவை மாடுகளுக்கு பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் கால்நடைத்துறையின் சார்பில் அவ்வப்போது மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழகம் முழுவதும் இன்றும், நாளையும் கால்நடை இலவச மருத்துவ முகாம் நடக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கப்பட்ட கிராமங்களில் மருத்துவ முகாம் நடக்கிறது. இதில் கால்நடை டாக்டர்களால் கறவை மாடுகளுக்கு சினை பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க பரிசோதனையும் செய்யப்படுகிறது. இம்முகாமில் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் மட்டுமின்றி இதர கால்நடைகளுக்கும் மருத்துவ பரிசோதனை செய்துகொள்ளலாம். இந்த அரிய வாய்ப்பை பயனாளிகள் மற்றும் விவசாயிகள் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுரை வழங்கியுள்ளது.

## கால்நடைகளுக்கு இன்று மருத்துவ முகாம்

திருவள்ளூர்:விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகளுக்கு, இன்றும், நாளையும் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில், 2011-12ம் ஆண்டு, 950 கறவை பசுக்களும், 13,672 செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த கால்நடைகளின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், உடல் எடையினை அதிகரிக்கவும் வேண்டி, மாவட்டம் முழுவதும், இன்றும் (24ம் தேதி), நாளையும் (25ம் தேதி) மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

பயனாளிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## காற்றுடன் மழை: வாழை மரங்கள் சாய்ந்து சேதம்

வேலூர்: ஆம்பூரில் பெய்த சூறாவளி காற்றுடன் கூடிய மழைக்கு, 10 ஆயிரம் வாழை மரங்கள் சாய்ந்தன.ஆம்பூர் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நேற்று முன் தினம் (மே 22) மாலை, 6 மணியில் இருந்து, 10 வரை சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது. இதனால், அங்குள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் வேருடன் சாய்ந்தது.

பெரியாங்குப்பத்தில் விவசாயி பூபதிக்கு சொந்தமான நிலத்தில் இருந்த, 2 லட்ச ரூபாய் மதிப்புள்ள வாழை மரங்கள் சாய்ந்து நாசமடைந்தன. "பாதிக்கப்பட்ட வாழை மர விவசாயிகளுக்கு தமிழக அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

## கரும்பு தோட்டம் தீயில் கருகியது

அவலூர்பேட்டை : மேல்மலையனூர் அடுத்த சின்னசாத்தாம்பாடியை சேர்ந்தவர் நடேசன் மகன் பஞ்சமூர்த்தி. இவரது கரும்பு தோட்டம் நேற்று மதியம் 1.45 க்கு தீப்பிடித்து எரிந்தது. அருகிலிருந்த சின்னப்பா, மாதவன், நடராஜன் கரும்பு தோட்டத்திலும் தீபரவியது. மேல்மலையனூர் தீயணைப்பு நிலைய அலுவலர் திருஞானம் தலைமையில் வீரர்கள் தீ மேலும் பரவாமல் அணைத்தனர்.இந்த விபத்தில் 4 ஏக்கர் கரும்பு தோட்டம் எரிந்தது.

## சொட்டு நீர் பாசனத்தில் நடவு: உலக வங்கி நிபுணர் ஆய்வு

திண்டிவனம் : திண்டிவனம் அருகே உள்ள ஆலங்குப்பம், நொளம்பூர் ஆகிய கிராமங்களில் நீர்வள, நிலவள திட்டத்தை உலக வங்கி குழுவினர்கள் ஆய்வு செய்தனர். திண்டிவனம் அடுத்த ஆலங்குப்பம், நொளம்பூர் ஆகிய கிராமங்களில் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் வேளாண்மை துறை சார்பில் நீர்வளம், நிலவளம் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மண் புழு உரம் தயாரித்தல், சொட்டு நீர் பாசனத்திற்கு மானிய திட்டத்தில் பொருட்கள் வழங்கப்பட்டுள் ளது. இதன் மூலம் விவசாயிகள் முலாம்பழம், தர்பூசணி, மக்காச் சோளம், காய்கறி பயிரிட்டுள்ளனர். இதனை உலக வங்கி நிபுணர்கள் ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த பென்ஒபரியன், ஹட்குக் பார்வையிட்டனர். வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் டாக்டர் சாத்தையா, திட்ட விஞ்ஞானிகள் டாக்டர் அன்புமணி, பிரபு, தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு, நீர்வள, நிலவள திட்ட இயக்குனர் டாக்டர் பாண்டியன், நீர்வள, நிலவள தலைமை அலுவலர்கள் சந்திரகுமார், ரவிச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கடும் வறட்சியால் நிலத்தடி நீர் மட்டம் சரிவு போர்வெல் கட்டணம் கடும் உயர்வு

சேலம்: தமிழகத்தில், நிலவும் கடும் வறட்சியால், ரிக் வண்டிகளுக்கு மவுசு அதிகரித்துள்ளது. அதனால், கட்டணத்தில் கடும் உயர்வு செய்யப்பட்டுள்ளது.
தமிழகத்தில், பருவமழை பொய்த்த நிலையில், கடுமையான வறட்சி நிலவுகிறது. ஆறுகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் வறண்டு விட்டதால், விவசாய பணிகள், வீடுகளின் பயன்பாட்டுக்கு நிலத்தடி நீரை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
நிலத்தடி நீரும் வறண்டு காணப்படுவதால், கடந்த ஆண்டில், 60 முதல், 80 அடியில் தண்ணீர் கிடைத்த இடங்களில் கூட தற்போது, 100 அடிக்கு மேல் ஆழ்துளை கிணறு அமைத்தால் தான்

தண்ணீர் கிடைக்கிறது. அந்த அளவுக்கு நிலத்தடி நீர் மட்டம் சுருண்டு விட்டது.
தமிழகத்தில் மொத்தம், 6,350 ரிக் வண்டிகள் செயல்படுகின்றன. இதில், 80 சதவீத வண்டி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டை மையமாக கொண்டே செயல்பட்டு வருகின்றன. இங்கிருந்தே, தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும், கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலத்துக்கும் அதிக அளவிலான ரிக் வண்டிகள் கொண்டு செல்லப்பட்டு, ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறது.
தமிழகத்தின் பல பகுதிகளிலும் பயிரிடப்பட்ட நெல், தானியங்கள் தண்ணீரின்றி வாடி வருகின்றன. இதனால், விவசாயிகள் விளை நிலங்களிலும், வரண்டு விட்ட கிணறுகளிலும், ரிக் வண்டிகளை கொண்டு ஆழ்துளை கிணறுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், ரிக் வண்டிகளுக்கு மவுசு அதிகரித்துள்ளது.
அதிக அளவில் ஆர்டர் வரத் துவங்கியதால், போர்வெல் அமைப்பதற்கான கட்டணத்தையும் உயர்த்தி உள்ளன.
இதில், கடந்த ஃபிப்ரவரி மாதத்தில் நிர்ணயித்த கட்டணத்தில் இருந்து, மீண்டும் உயர்வு செய்யப்பட்டுள்ளது. சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு, ஃபிப்ரவரி மாதம் அடி ஒன்றுக்கு, 65 ரூபாய் என, இருந்த கட்டணம், தற்போது, 85, 90 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
டெல்டா மாவட்டங்கள், மதுரை, கோவை, ஈரோடு, விழுப்புரம், சென்னை பகுதிகளுக்கான கட்டணம், 90 ரூபாய் என்பதை, 110 ரூபாயாகவும், திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, தேனி மாவட்டங்களுக்கான கட்டணத்தை, 95 ரூபாயில் இருந்து, 120 ரூபாயாக அதிகரித்துள்ளதுடன், போக்குவரத்து செலவுக்கு, தனியாக ஒரு தொகையையும் வசூலித்து வருகின்றனர்.

## 10 மடங்கு! வறட்சியால் வாழை இலை விலை அதிகரிப்பு சேலத்தில் ஒரு இலை 7 ரூபாய்க்கு விற்பனை

சேலம்: கடும் வறட்சி காரணமாக, வாழை இலைகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது.
திருமண நிகழ்ச்சி, கோவில் விழா மற்றும் அன்னதானம் செய்யும் இடங்களில் அதிகம் பயன்படுவது வாழை இலைகளே. அனைத்து டீ கடைகளிலும், ஹோட்டல்களிலும் டிபன் மற்றும் சாப்பாட்டுக்கு வாழை இலைகளையே பயன்படுத்தப்படுகின்றனர். வரத்து குறைவு காரணமாக, வாழை இலைகள் மிகவும் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.
சேலம் வ.உ.சி., மார்க்கெட் வியாபாரி பானுசங்கர் கூறியதாவது:
வத்தலகுண்டு, தூத்துக்குடி பகுதியிலிருந்து தினமும் வாழை இலைகள் சேலத்துக்கு வருகிறது. தினமும், 1,000 வாழை இலை கட்டுகள் வந்தன. கடும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறையால், 300

வாழை இலை கட்டுகளே தற்போது மார்க்கெட்டுக்கு வருகின்றன. இதனால், இலைகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. 35 ஆண்டுகளாக வாழை இலை தொழில் செய்து வரும் நான், வாழை இலை பத்து மடங்கு விலை உயர்ந்ததை இன்று தான் பார்க்கிறேன்.
ஐந்து அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 2,500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. எட்டு அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 5,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கடந்த மாதம், எட்டு அடி நீளம் உள்ள, 200 வாழை இலை, 500 ரூபாய்க்கு மட்டுமே விற்பனையானது. மே, 13ம் தேதி, 3,500 ரூபாய்க்கு வாழை இலை விற்கப்பட்டது. இதை தொடர்ந்து கடும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறையால் வாழை இலைகளின் வரத்து அடியோடு குறைந்து விட்டது.
சேலம் வ.உ.சி., மார்க்கெட் பகுதியில், 70 வாழை இலை கடைகள் உள்ளன. தூத்துக்குடி, வத்தலகுண்டு பகுதியில் இருந்து வரும் வாழை இலைகள் அகலம் கொண்டுள்ளதால், ஹோட்டல்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. ஒரு இலை, 2 ரூபாய்க்கு ஹோட்டல்களுக்கு வினியோகம் செய்து வருகிறோம். அவர்களிடம், ஒரு இலைக்கு, ஏழு ரூபாய் கேட்டால் தரமாட்டார்கள். எனவே, நாங்கள் நஷ்டத்தில் தான் அவர்களிடம் இலையை விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சில்லரையில் இங்கு வந்து வாங்குவோருக்கு, ஒரு டிபன் இலை, மூன்று ரூபாய்க்கும், சாப்பாடு இலை, ஏழு ரூபாய்க்கும் விற்கிறோம்.
தற்போது, முகூர்த்த நாள் அதிகரித்துள்ளதும், கோவில் விழாக்கள் அதிகரித்துள்ளதாலும், வாழை இலை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால், வரத்து குறைவால், வாழை இலைகள் கிடைப்பது அரிதாக உள்ளது. மழை பெய்தால் மட்டுமே வாழை இலைகளின் விலையை கட்டுப்படுத்த முடியும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## சிறு விவசாயிகளுக்கு மூலதன தொகை வேளாண் வணிக நட்பமைப்பு உதவி

சேலம்: தமிழகத்தில், சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, தொழில் தொடங்க மூலதன தொகை மற்றும் திட்ட மேம்பாட்டு வசதிகளை வழங்குகிறது.
சேலம் மாவட்டத்தில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மட்டுமின்றி பெங்களூருவுக்கும் பூக்கள் அனுப்பப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒசூரில், அதிகளவில் ரோஜா பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் ரோஜாக்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
தமிழக சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, அரசு, தனியார், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில், சிறு விவசாயிகள் தொழில் தொடங்க மூலதன தொகை, திட்ட மதிப்பீட்டில், 10 சதவீதம் அல்லது பங்கு மதிப்பில், 26 சதவீதம் வரை வழங்குகிறது.

விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில், தோட்டக்கலை, பூக்கள் அபிவிருத்தி, மூலிகைகள், மணம் தரும் தாவரங்கள், முந்திரி, தென்னை மற்றும் மீன்துறை சார்ந்த தொழில்களுக்கு உதவி வழங்கப்படுகிறது.

மேலும், விபரங்களுக்கு மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, சிப்பட் ரோடு, திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை என்ற முகவரியை அல்லது, 044- 22253498 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என மாவட்ட வேளாண் வணிகத்துறை தெரிவித்துள்ளது.

## லாபமற்ற சாகுபடியால் பருத்தி பயிரிடும் பரப்பளவில் தொடர் பின்னடைவு



வரும் ஜூன் மாதம் துவங்கும் கரீப் பருவத்தில், பருத்தி பயிரிடும் பரப்பளவு, சென்ற பருவத்தை விட, 10-15 சதவீதம் குறையும் என, இந்திய ஜவுளி ஆணையம் மதிப்பிட்டுள்ளது.பருத்தி சாகுபடியில், மகசூல் மற்றும் லாப வரம்பு மிக குறைவாக உள்ளதால், விவசாயிகள், மாற்றுப் பயிருக்கு மாறி வருகின்றனர். இதன் காரணமாக, பருத்தி பயிரிடும் பரப்பளவு, ஆண்டுக்காண்டு சுருங்கி வருகிறது.

**நிலக்கடலை:**கடந்த 2011-12ம் நிதியாண்டில்,பருத்தி சாகுபடி பரப்பளவு,1.28 கோடி ஹெக்டேராக இருந்தது. இது, உத்தேச மதிப்பீட்டின்படி,சென்ற 2012-13ம் நிதியாண்டில்,1.18 கோடி ஹெக்டேராக குறைந்து உள்ளது. "நடப்பு ஆண்டில், விவசாயிகள் நிலக்கடலை பயிருக்கு மாறி வருவதால், பருத்தி பயிரிடும் பரப்பளவு மேலும் குறையும்' என, குஜராத் மாநில கூட்டுறவு பருத்தி கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனர், என்.எம்.சர்மா தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, பருவ மழை தவறியதால், பருத்தி பயிரிடும் பரப்பளவு குறைந்தது. மேலும், கடந்த ஆண்டை விட, நடப்பு ஆண்டில், பருத்திக்கு குறைவான விலையே கிடைப்பதால், விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடியில் ஆர்வம் குறைந்துள்ளது என, அவர் மேலும் கூறினார்.பருத்தியின் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட, வெளிச்சந்தையில் அதன் விலை குறைவாக உள்ளதும், விவசாயிகளை இதர பயிர் சாகுபடியில் ஈடுபடத் தூண்டியுள்ளது. அகம

தாபாத்தை சேர்ந்த பருத்தி வல்லுனர் அருண் தலால், கூறியதாவது:
விவசாயிகள்,20 கிலோ கச்சா பருத்திக்கு,1,000 ரூபாய் கிடைக்கும் என்று எதிர் பார்க்கின்றனர். ஆனால், 720 - 780 ரூபாய் வரையே கிடைக்கிறது.ஆந்திராவில்,தற்போது, ஒரு குவிண்டால் பருத்தி,3,900 ரூபாய்க்குவிற்கப்படு கிறது. இது, கடந்த 20 நாட்களுக்கு முன்பு, குறைந்தபட்ச ஆதரவு விலையை விட, குவிண்டாலுக்கு 400 - 500 ரூபாய் வரை குறைவாக இருந்தது.இவ்வாறு அவர் கூறினார்.
ஏற்றுமதி:சர்வதேச பொருளாதார மந்தநிலையால், பருத்தி ஏற்றுமதியும் பாதிக்கப் பட்டுள்ளது. இந்தியாவின் பருத்தி ஏற்றுமதியில், சீனாவின் பங்களிப்பு, 60 சதவீதமாக இருந்தது.
இந்நிலையில், சீன அரசின் அதிரடி உத்தரவால், அந் நாட்டின் ஜவுளி நிறுவனங்கள்,இந்தியாவில் இருந்து பருத்தி இறக்குமதி செய்வதை அடியோடு நிறுத்தி விட்டன. இந்திய பருத்தியை இறக்குமதி செய்தால்,அத்தொகையை போல்,மூன்று மடங்கிற்கு,சீன அரசு அமைப்பிடம் இருந்து பருத்தியை வாங்க வேண்டும் என்ற உத்தரவு தான் இதற்கு காரணம்.
இந்திய பருத்தி ஏற்றுமதியில், இரண்டாவது நாடாக உள்ள வங்கதேசமும், அதன் பருத்தி இறக்குமதியை குறைத்துக் கொண்டுள்ளது. பாகிஸ்தானும், ஆஸ்திரேலியா மற்றும் ஆப்ரிக்க நாடுகளில் இருந்து, குறைந்த விலையில் கிடைக் கும் பருத்தியை, இறக்குமதி செய்யத் துவங்கி உள்ளது.உள்நாட்டிலும், ஜவுளி ஆலைகளின் பருத்தி தேவை, கடந்த ஆண்டை விட, நடப்பாண்டு குறைந்துள்ளது. இதனால், சந்தையில் இருப்பு அதிகரித்து, அதன் விலை சரிவடைந்து உள்ளது. வரும் கரீப் பருவ வேளாண்மைக்கு, பருத்தி விதை வாங்குவதற்காக, விவசாயிகள், வேறு வழியின்றி தங்களிடம் உள்ள பருத்தியை, குறைந்தபட்சஆதரவு விலையை விட, குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதையடுத்து, இந்திய பருத்தி கழகமும்,தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பும் இணைந்து, ஆந்திரா மற்றும் மகாராஷ்டிராவில், பருத்தியை கொள்முதல் செய்யத் துவங்கியுள்ளன.
குஜராத்:இதனால், அம்மாநிலங்களில் கச்சா பருத்தி விலை சற்று அதிகரித்துள்ளது. ஆனால், குஜராத்தில் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால், அங்குள்ள விவசாயிகள், குறைந்தபட்ச ஆதரவு விலையை விட, குறைந்த விலைக்கு பருத்தியை விற்பனை செய்து வருகின்றனர்.இது தவிர, சர்வதேச சந்தையில், குறைந்த விலையில் கிடைக்கும் பருத்தியை, உள்நாட்டு ஜவுளி நிறுவனங்கள் இறக்குமதி செய்து வருகின்றன. இப்படிப்பட்ட சூழல் காரணமாக, ஒட்டுமொத்த அளவில், பருத்தி சாகுபடியில், விவசாயி களின் ஆர்வம் குறைந்துள்ளது. இதன் தாக்கம், வரும் கரீப் பருவ பருத்தி பயிரிடும் பரப்பளவில் தெரியவரும் என, வேளாண் வல்லுனர்கள் தெரிவித்து உள்ளனர்.
- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.05.2013 A.M**

---

## கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் மருத்துவ முகாம்

நெல்லிக்குப்பம், : நெல்லிக்குப்பம் அருகே பாலூர் ஊராட்சியில் கடலூர் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் நீர்வளம் மற்றும் நிலவள திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு மலட்டு தன்மை நீக்குதல் மற்றும் கோமாரி தடுப்பூசி போடும் மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் சரவணன் தலைமை தாங்கினார். பாலூர் நீர்வள நிலவள திட்ட செயலாளர் செல்வராஜ் வரவேற்றார். ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் பார்த்திபன் முன்னிலை வகித்தார். கடலூர் மண்டல துணை இயக்குனர் ராமசாமி முகாமை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். நெல்லிக்குப்பம் கால்நடை உதவி மருத்துவர் மகாலட்சுமி கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டார். நிகழ்ச்சியில் பாலூர் கால்நடை ஆய்வாளர் ராஜமச்சந்திரசோழன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் காந்தி, என்.ஆர்.டி.எஸ் தொண்டு நிறுவன தலைவர் வேலுசாமி, ஆசிரியர் மாயவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு எதிரொலி 1900 ஏக்கரில் தீவனச்சோளம் வளர்க்க ஷ்1.29 கோடி நிதி ஒதுக்கீடு

ஈரோடு, : ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் கால்நடை வளர்ப்போருக்கு அரசு மானியத்தொகை வழங்குவது மற்றும் தீவனசோளம் உற்பத்தி செய்வதை ஊக்குவித்தல் தொடர்பான ஆலோசனை கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். உதவி இயக்குநர்கள் டாக்டர் தங்கராஜ், டாக்டர் பழனிசாமி, கால்ந டை பெருக்க மற்றும் தீவன அபிவிருத்தி உதவி இயக்குனர் டாக்டர் முருகன் உட்பட கால்நடை

பராமரிப்புத்துறை டாக்டர்கள், ஊராட்சி தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் சண்முகம் பேசியதாவது: வறட்சி காரணமாக கால்நடை வளர்ப்போர் கடும் சிரமத்திற்கு ஆளாக நேரிடுகிறது. இதை போக்கும் வகையில் தமிழக முதல்வர் ஈரோடு மாவட்டத்திற்கு கால்நடை தீவன சோளம் உற்பத்தியை பெருக்க 1900 ஏக்கர் பரப்பளவில் தீவன சோளம் பயிரிடுவதற்காக வறட்சி நிவாரண நிதியிலிருந்து ரூ.1.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்.

இதன் மூலம் கால்நடைகளுக்கு தேவையான உணவு தட்டுப்பாடின்றி கிடைக்கும். கால்நடை வளர்ப்போர் குறைந்தபட்சம் அரை ஏக்கர் பரப்பளவும், அதிகபட்சமாக 1 ஏக்கர் பரப்பளவும் கொண்ட விவசாயிகள் கால்நடைகளுக்கு தீவன சோளம் பயிரிட வறட்சி நிவாரண நிதியின் அரசு மானியமாக அதிகபட்சமாக ரூ.6800 வீதம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை கால்நடை வளர்ப்போர் பயன்படுத்திக்கொண்டு கால்நடை வளர்ப்போர் தீவன சோளம் பயிரிடலாம். இதுகுறித்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் இத்திட்டம் குறித்து கிராமப்பகுதிகளுக்கு எடுத்துக்கூறி அரசு மானிய உதவியுடன் கால்நடை தீவன சோளம் பயிரிட்டு கால்நடைகளின் உணவு தேவையை பெருக்கி கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் சண்முகம் பேசினார்.

## நாட்டுக்கோழி குஞ்சுகள் இருமடங்கு வளர்ச்சி பெற என்ன செய்யலாம்? கால்நடை துறையினர் யோசனை

விருதுநகர், : நாட்டுக்கோழி குஞ்சுகளுக்கு கரையானை உணவாக கொடுத்தால் இரு மடங்கு வளர்ச்சி அடையும் என கால்நடைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கரையான்களை உற்பத்தி செய்ய அதிக சிரமமோ, மூலதனமோ தேவையில்லை. ஒரு பழைய பானைக்குள் கிழிந்த சாக்கு, காய்ந்த சாணம், கந்தல் துணி, இற்றுப்போன கட்டை, மட்டை, காய்ந்த இலை, ஓலை போன்ற நார் பொருட்கள் ஆகியவற்றை திணித்து, அவற்றில் கொஞ்சம் நீர் தெளித்து வீட்டிற்கு வெளியே தரையில் கவிழ்த்து வைக்க வேண்டும். மாலையில் கவிழ்த்து வைத்து மறுநாள் காலையில் பானையை பார்த்தால் கரையான்கள் உற்பத்தியாகி இருக்கும். கரையான் இருக்கும் பகுதியில் நாட்டு கோழி குஞ்சுகளை விட்டால் அனைத்து கரையான்களையும் தின்று விடும். கரையான் தின்ற அரை மணி நேரத்திற்கு குஞ்சுகளுக்கு தண்ணீர் கொடுக்கக்கூடாது. ஒரு பானையில் சேரும் கரையான் 10 முதல் 15 குஞ்சுகளுக்கு போதுமானது. செம்மண் உள்ள பகுதிகளில் அதிக கரையான்கள் கிடைக்கும். தேவைக்கு ஏற்ப

ஒன்றுக்கு மேற்பட்ட மண் பானைகளை கவிழ்த்து வைக்கலாம். காலையில் சூரியன் உதயமாவதற்கு முன்பாக கரையான்களை கோழிகளுக்கு இரையாக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்பகுதியில் உள்ள எறும்புகள் கரையான்களை தின்றுவிடும். கரையான் சத்து மிக்கது. அதில் புரதம் 36 சதவீதம், கொழுப்பு 44.4 சதவீதம், மொத்த எரிசக்தி 560 கலோரிகள் உள்ளன. சில வகை கரையான்களில் வளர்ச்சி ஊக்கி 20 சதவீதம் உள்ளது. இதன் காரணமாக கோழிக் குஞ்சுகள் விரைந்து வளர்ந்து எடை கூடுகிறது. 'எனவே கரையான் உணவை கோழி குஞ்சுகளுக்கு கொடுத்து கூடுதல் லாபம் கிடைக்கும் என கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## போச்சம்பள்ளி அருகே பரபரப்பு பேய் பீதியால் 3 நாள் விடிய விடிய பூஜை

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி அருகே இரண்டு பெண்கள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டதால், பேய் நடமாட்டம் உள்ளதாக கிராம மக்கள் பீதி அடைந்தனர். பேய்களை விரட்ட 3 நாட்களாக இரவு நேரத்தில் வீடுதோறும் சிறப்பு பூஜைகள் செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே புளியம்பட்டி, முல்லைநகர், திருவயலூர் ஆகிய கிராமங்கள் அடுத்தடுத்து உள்ளன. இந்த கிராமங்களை சேர்ந்த மக்கள் பெரும்பாலானவர்கள் விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகின்றனர். கடந்த 2 மாதத்திற்கு முன் புளியம்பட்டி மற்றும் திருவயலூரை சேர்ந்த 2 இளம் பெண்கள் விஷம் குடித்தும், தூக்குப்போட்டும் தற்கொலை செய்து கொண்டனர். அடுத்தடுத்து இரண்டு பெண்கள் தற்கொலை செய்து கொண்டதால் கிராம மக்கள் பீதி அடைந்தனர்.

கிராமத்தில் பேய் நடமாட்டம் உள்ளதாக நினைத்து இரவில் வெளியே வருவதற்கு கூட அச்சமடைந்து சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வீடுகளில் முடங்கினர். இந்நிலையில் கிராமத்தை சேர்ந்த பெண் ஒருவர் சாமி அருள் வந்து ஆடி, காத்து கருப்பு கிராமத்திற்குள் புகுந்துள்ளதாகவும், அதனை விரட்டா விட்டால் உயிர் பலிகள் தொடரும் என்றும் வாக்கு கூறி கூடுதல் பீதியை கிளப்பினார். இதையடுத்து கிராம மக்கள் ஒன்று கூடி சிறப்பு பூஜைகள் நடத்தினர்.

பின்னர், காத்து கருப்பு ஊரை விட்டு சென்று விட்டதா என அருள்வாக்கு கூறிய பெண்ணிடம் மீண்டும் கிராம மக்கள் கேட்டபோது, காத்து கருப்பை ஊருக்குள் இருந்து விரட்ட அருகில் உள்ள கல்லாவி கிராமத்தில் இருந்து வேடியப்பன் சுவாமியை எடுத்து வந்து இரவில் பூஜை செய்ய வேண்டும் என்று கூறி உள்ளார்.

இதையடுத்து 3 கிராம மக்களும் ஒன்று கூடி இரவில் கல்லாவி வேடியப்பன் கோயிலுக்கு சென்று வேடியப்பன் உற்சவரை மேளதாளம் முழங்க ஊர்வலமாக கொண்டு, 3 கிராமங்களிலும் விடிய விடிய வீடு தோறும் பூஜை செய்தனர்.

3வது நாளான நேற்று முன்தினம் இரவு திருவயலூர் கிராமத்திற்கு கொண்டு வந்து ஒவ்வொரு வீடாக பூஜை செய்தனர். பின்னர் நேற்று அதிகாலையில் கல்லாவி கோயிலுக்கு சுவாமியை மீண்டும் கொண்டு சென்று வைத்தனர். இந்த பூஜைகளால் இனி கிராமத்திற்குள் பேய் நடமாட்டம் இருக்காது என கிராம மக்கள் நம்பிக்கையில் உள்ளனர்.

## விலையில்லா கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் 2 நாட்கள் நடக்கிறது

தர்மபுரி, : தர்மபுரி மாவட்ட ஆட்சியர் லில்லி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 2011&12ம் ஆண்டு 150 கறவை பசுக்களும், 12 ஆயிரத்து 760 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. 2012&13 ஆண்டிற்கு கடந்த 5 மாதங்களில் 150 கறவை பசுக்களும், 21 ஆயிரத்து 760 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடுகளின் பால் திறனை அதிகரிக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் தமிழகம் முழுவதும் வரும் 24 மற்றும் 25ம் தேதிகளில் இனப்பெருக்க பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் விலையில்லா கால்நடைகள் வழங்கப்பட்ட 92 கிராமங்களில் முகாம் நடக்கவுள்ளது. இந்த முகாமில் பயனாளிகள் மட்டுமின்றி அனைத்து விவசாயிகளும் தங்களது ஆடு, கறவை மாடுகளுடன் பங்கேற்று பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## உழவர் பெருவிழா

மானாமதுரை, : மானாமதுரை அருகே தெற்குசந்தனூரில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி மன்றத்தலைவர் நாகவள்ளி தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் மூர்த்தி முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் முத்துமீனாள் பாரம்பரிய பொருட்களின் உபயோகம், சிறுதானியங்கள் சாகுபடி முறைகள் பற்றி விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் நெல், கரும்பு, நிலக்கடலை பயறு வகைப்பயிர்களின் சாகுபடி முறைகள், தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

பொதுப்பணித்துறை நீர்வடிப்பகுதி பொறியாளர் ஆரோக்கியரட்சகன் பண்ணைக்குட்டைகள்

அமைத்தல், இயற்கை வளமேம்பாட்டு பணிகள் குறித்து விளக்கினார். தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், வேளாண்மை விற்பனை ஆகிய துறைகளின் அலுவலர்கள் மண்மாதிரி சேகரித்தல், விதை நேர்த்தி செய்தல், விதை கடினப்படுத்துதல், எலி ஒழிப்பு முறைகள் குறித்து விளக்கினர்.

விழாவில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு நெல் நுண்ணூட்டம், உயிர் உரங்கள், கைத்தெளிப்பான் வழங்கப்பட்டது. விழாவில் பாரம்பரிய பொருட்களின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு பேரணி நடந்தது. கிராமிய கலைநிகழ்ச்சிகள் மூலம் அரசு நலத்திட்டங்கள் விளக்கப்பட்டது. துணை வேளாண்மை அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் பாண்டியம்மாள் செய்திருந்தார்.

## பயிர்களை பாதுகாத்திட தடையில்லா மின்சாரம்

விழுப்புரம், : தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட அமைப்பு குழு கூட்டம் விழுப்புரத்தில் நடந்தது. கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். வறட்சி பாதிப்பு குறித்த அறிக் கையை ஒருங்கிணைப் பாளர் கலியமூர்த்தி சமர்ப்பித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

வறட்சியால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் கரும்புக்கு ரூ.50,000, ஒரு ஏக்கர் நெல்லுக்கு ரூ.25,000, ஒரு ஏக்கர் மரவள்ளி கிழங்கிற்கு ரூ.40,000 மற்றும் மணிலா, மஞ்சள், வாழை, கருணைகிழங்கு, தென்னை போன்ற பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை போக்கிட போர்க்கால அடிப்படை யில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட் சிக்கு பிறகு எஞ்சியுள்ள பயிர் களை நிலத்தடி நீர் மூலமாக பாதுகாத்திட தடையில்லா மின்சாரம் வழங்க வேண் டும். வறட்சி நிவாரண பணிகளுக்கு தமிழக அரசு கேட்கும் நிதியை மத்திய அரசு முழுமையாக வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில குழு உறுப்பினர் சந்திரசேகரஆசாத், மாவட்ட செயலாளர் சரவ ணன், விவசாய சங்க அமைப்பு குழு உறுப்பினர் கள் குப்புசாமி, ராமசாமி, சந்தானகாந்த், கல்யாணசுந்தரம், ராஜராமன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## வானிலை ஆராய்ச்சி மையம் தகவல் கேரளாவில் 28ம் தேதி பருவ மழை தொடங்கும்



திருவனந்தபுரம்: கேரளாவில் தென்மேற்கு பருவமழை வரும் 28ம் தேதி தொடங்கும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. கேரளாவில் தென்மேற்கு பருவமழை ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரம் தொடங்கும். இந்த வருடம் ஜூன் 3ம் தேதி பருவமழை தொடங்கும் என டெல்லி வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்திருந்தது. ஆனால், அந்தமான் தீவுகளில் நேற்று முன்தினம் முதல் தென்மேற்கு பருவமழை தொடங்கி விட்டது. இதன் எதிரொலியாக வழக்கத்தை விட சில நாட்களுக்கு முன்னதாக அதாவது மே 28ம் தேதியே பருவமழை தொடங்கும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ள.இதற்கிடையே கடந்த சில தினங்களாக திருவனந்தபுரம், கொல்லம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் கோடை மழை பெய்து வருகிறது. இன்று வரை மழை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 55 கி.மீ. வேகம் வரை காற்று வீசக்கூடும் என்பதால் கடலுக்கு செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

24.05.2013 A.M

## உற்பத்தி குறைந்தாலும் உரிய விலை கிடைக்கவில்லை மாங்காய் விவசாயிகள் கவலை

போடி,

போடி பகுதியில் மாங்காய் விளைச்சல் மிகவும் குறைந் துள்ளது. அதே நேரத்தில் வெளி மாநில வியாபாரிகள் மாங்காய்கள்வாங்க அதிகளவில் வந்துள் ளனர்.

மாந்தோப்புகள்

தேனி மாவட்டம், போடி நாயக்கனூர் வடக்கு, மேற்கு மலை அடிவாரப்பகுதி பகுதி களான முந்தல், சேரடிப்பாறை, கவுல், கொட்டக்குடி, குரங் கணி, வலசை, சாமி வாய்க்கால், முத்துக்கோம்பை, பெரி யாற்றுக் கோம்பை உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன. இந்த பகுதியில் கல்லாமை, செந்தூரம், காசா, கிரேப் காதர், காளையப்பாடி, பந்தான வள்ளி போன்ற ரக மாங்காய்கள் விளைச்சல் அடை கின்றன.

தற்போது செந்தூரம், கல்லாமை, காசா ரக மாங் காய்கள் விற்பனைக்கு வந்துள் ளன. கடந்த ஆண்டு 60 சதவீத விளைச்சல் அடைந்த மாந் தோப்புகளில் இந்த ஆண்டு விளைச்சல் மிகவும் குறைந்து போய் உள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் பெய்த மழை யினால் மாந்தோப்புகளில் உள்ள மா மரங்களில் பூக்கள் ஏராளமாக உதிர்ந்து போனது. இதனால் இந்த ஆண்டு 25 சதவீத அளவில் மட்டுமே மாமரங்களில் விளைச்சல் ஏற்பட்டுள்ளது.

விளைச்சல் குறைந்தும் விலை இல்லை

விளைச்சல் குறைந்து, வரத்து குறைந்து இருந்தாலும் மாம்பழங்களின் விலை கடந்த ஆண்டின் நிலையே நீடிக் கிறது. கல்லாமை ரக மாங்காய் நாட்டுக்காய் மூட்டை கணக்கில் ஒரு டன் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரையும் விற்பனை செய்யப்படுகிறது. ஜாதிரக மாங்காய்களான

காளையப்பாடி ஒரு டன் ரூ.30 ஆயிரம் எனவும், பந்தான வள்ளி ரூ.25 ஆயிரம் எனவும், காதர் ரக மாங்காய் ரூ.25 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரையிலும் விற்பனை செய்யப் படுகிறது.

செந்தூரம் ரகம் டன் ஒன்றிற்கு ரூ.9 ஆயிரம் முதல் ரூ.12 ஆயிரம் வரையிலும் விற் பனை ஆகிறது. கறுப்பு கறை படியாத மற்றும் மருந்து அடிக்காத மாங்காய் ரகங் களையே கேரள மாநில வியா பாரிகள் தேர்வு செய்கின்றனர். கேரள மாநிலம் மட்டுமில்லா மல் கர்நாடகம், ராஜஸ்தான், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய மாநில வியாபாரிகளும் மாங்காய்கள் வாங்க போடி, பெரியகுளம், நத்தம் பகுதிகளில் குவிந்துள்ள னர். இது குறித்து போடியைச் சேர்ந்த மாங்காய் வியாபாரி சின்னபாண்டி கூறிய தாவது:–

போடி பகுதியில் கடந்த ஆண்டைக்காட்டிலும் தற்போது மாங்காய் விளைச் சல் குறைந்து 25 சதவீதம் மட்டுமே விளைச்சல் கண்டுள் ளது. ஜாதி ரக மாங்காய்களை தவிர்த்து, காசா, செந்தூரம், கல்லாமை ரக மாங்காய்கள் கடந்த ஆண்டுகளில் உள்ள விலையே நீடிக்கிறது.

மாங்காய் பறிக்கச்செல்லும் ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.550 சம்பளம், மாங்காய் பொறுக்க செல்லும்  பெண் தொழிலா ளர்களுக்கு  ரூ.300 சம்பளம் எனவும் வழங்கப்படுகிறது. விளைச்சல் குறைந்த நிலையில் காய் பறிப்பு சம்பளம், வண்டி வாடகை போன்றவை அதிகரித்துள்ள நிலையில் தற்போது உள்ள விலை போது மானதாக இல்லை. சீசன் பின்பகுதியில் விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு மாங்காய் வியாபாரி சின்னப்பாண்டி கூறினார்.

பெரும்பான்மையான விவ சாயிகள் தங்களது மாந்தோப்பு களை குத்தகைக்கே விட்டு விடுகின்றனர். ஒரு சிலரே சொந்தத்தில் மாங்காய் பறித்து விற்பனை செய்கின்றனர். விளைச்சல் குறைந்துள்ளதால் குத்தகைக்கு எடுத்த வியா பாரிகள் மிகவும் நஷ்டம் அடைய வாய்ப்பு உள்ளது.

## விழுப்புரம் மாவட்டத்துக்கு 2013–14–ம் நிதியாண்டில் 12,793 பேருக்கு விலையில்லா கறவை மாடு,ஆடுகள் வழங்கப்படும் கலெக்டர் சம்பத் தகவல்

விழுப்புரம்,

விழுப்புரம் மாவட் டத்திற்கு 201314ம் நிதியாண்டில் 12,793 பேருக்கு விலையில்லா கறவை மாடு, ஆடுகள் வழங்கப்பட உள்ளது என்று கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

12,793 பேருக்கு கறவை மாடு, ஆடுகள்

விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடைத் துறையின் மூலம் விலையில்லா கறவை பசு மற்றும் விலையில்லா ஆடுகள் வழங்க 2013ம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களுக்கான பயனாளிகள்

தேர்ந்தெடுப்பது குறித்த ஆலோசனை கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி பேசியதாவது:

தமிழக முதல்அமைச்சரின் ஆணையின்படி விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடைத் துறையின் மூலம் விலையில்லா கறவை பசு மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. 201314ம் ஆண்டிற்கு 23 கிராமங்களில் 1,150 பயனாளி களுக்கு விலையில்லா கறவை பசுக்களும், 253 கிராமங்களில் 11,643 பேருக்கு வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளது. 2013 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 3 கிராமங் களுக்கு விலையில்லா கறவை பசுக்களும் 37 கிராமங்களில் 1,828 பேருக்கு தலா 4 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டது. ஜூன் மற்றும் ஜூலை மாதத்திற்கு பயனாளிகள் தேர்வு செய்வது குறித்து சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு மட்டும் சிறப்பு கிராம சபை கூட்டம் வருகிற 27ந் தேதி நடைபெற உள்ளது. இக்கிராம சபை கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கிராம மக்கள் கலந்துகொண்டு தங்கள் கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம். இவ்வாறு அவர் பேசி னார்.

கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் அழகரசன், உதவி இயக்குனர் கள் குருவையா, சுந்தர்ராஜ், குபேந்திரன் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள், துணை வட்டார வளர்ச்சி அலு வலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப் பினர்கள் பலர் கலந்து கொண் டனர்.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் தற்போது விலை குறைந்துள்ள உரங்கள் அதிக அளவில் இருப்பு

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், தற்போது விலை குறைந்துள்ள உரங்கள் அதிக அளவில் இருப்பு வைக்கப் பட் டுள்ளன என்று மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பில் கூறி இருப்ப தாவது:

**தென்மேற்கு பருவ மழை**

அந்தமான் நிகோபார் மற்றும் கேரளா ஆகிய பகுதிக ளில் இந்த ஆண்டிற் கான தென்மேற்கு பருவ மழை சரியான நேரத்தில் துவங்கி யுள்ளது. அதனை தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டத்திலும் சரியான நேரத்தில் மழை பெய்யும் என எதிர் பார்க்கப் படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், பருத்தி ஆகிய மானாவாரி பயிர்களுக்கு மழை தேவைப்படுவதால் ஜூன், ஜூலை மாதங்களில் சாகுபடி செய்திட வேண்டும். சென்ற ஆண்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயி களுக்கு விளைச்சல் பாதிப்பு இருந்த போதிலும் சரியான பருவ காலத்தில் விதைத்த விவசாயிகள் நல்ல மகசூல் பெற்றது குறிப்பிடத் தக்க தாகும்.

**வறட்சி நிவாரணம்**

சென்ற ஆண்டில் பயிர் விளைச்சல் பாதிப்புக்குள் ளான விவசாயிகளுக்கு தற் போது வறட்சி நிவாரணத் தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே விவசாயி கள் வரும் பருவகாலத்தில் தாங்கள் பயிரிட உள்ள பயிர் களுக்கேற்ற தேவையான உரங் களை முன்கூட்டியே, தற் போதே வாங்கி இருப்பு வைத்து பயன்படுத்திக் கொள் ளலாம்.

தற்போது விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் யூரியா, டி.ஏ.பி, பொட்டாஷ், (20:20:0:13 மற்றும் 10:26:26)காம்ப்ளக்ஸ் உரங்கள் மற்றும் கலப்பு உரங்கள் விற்பனை செய்யப் படுகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய கிட்டங்கி கள், மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 53 தொடக்க வேளாண்மை கூட்டு றவு கடன் சங்கங்களிலும் சேர்த்து மொத்தம் யூரியா 2,000 டன், டி.ஏ.பி 4,000 டன், பொட்டாஷ் 1,000 டன், 20:20:0:13 உரம் 2,500 டன், 10:26:26 உரம் 2,500 டன், பாமணி (17:17:17) உரம் 1,000 டன் மொத்தம் 13 ஆயிரம் டன் உரங்கள் இருப்பு உள் ளது.

**விலை குறைவு**

மேலும் கலப்பு உரம் விவசாயிகளின் தேவைக்கேற்ப உடனடியாக வழங்கப்படும். விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாக டி.ஏ.பி உரம் தற்போது 50 கிலோ மூட்டையானது (இப்கோ) ரூ.75 விலை குறைந்து ரூ.1,125.00 க்கும், 20:20:0:13 (இப்கோ) உரம் 50 கிலோ மூட்டையானது ரூ.50 விலை குறைந்து ரூ.900 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த விலையானது சர்வ தேச விலை நிலவரத்திற்கு ஏற்ப மாறி வருவதால் விவசா யிகள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிக ளுக்கு தேவையான அனைத்து உரங்களும் அவர்களின் தேவைக்கேற்ப, முன்கூட்டியே தொடக்க வேளாண்மை கூட் டுறவு கடன் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வரு கின்றது.

**வேண்டுகோள்**

மேலும் வரும் பருவ காலத்திற்கு ஏற்ப தேவையான தரமான அதிக விளைச்சல் தரும், உயர் ரக பருத்தி, மக்காச் சோளம், நெல், வெங்காய விதைகள் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் செய்து ள்ள இந்த வாய்ப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## ஊட்டியில் காய்கறிகளின் விலை ‘கிடு கிடு’ உயர்வு சின்னவெங்காயம் கிலோ ரூ.64க்கு விற்பனை

ஊட்டி,

ஊட்டியில் காய்கறி களின் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது. இதன் காரணமாக இல்லத்தரசி கள் கவலை அடைந்து உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கடும் வறட்சி

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காபி ஆகியவை பிர தான விவசாயமாக உள்ளது. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, நடுவட்டம் பகுதியில் தேயிலை யுடன் மலைப்பிரதேச காய் கறிகள் விளைவிக்கப்படுகின் றன. கூடலூர் பகுதியில் பீன்ஸ், முள்ளங்கி, ஏலக்காய், கிராம்பு, குறுமிளகு, இஞ்சி உள்பட சில மலைப்பிரதேச காய்கறிகளும், பாகற்காய், புட லங்காய், மிளகாய், நெல், வாழை, மரவள்ளி மற்றும் சேனை, கருணை கிழங்குகள் உள்பட சமவெளி பிரதேச பயிர்களும் விளைவிக்கப்படு கின்றன.

தக்காளி, சின்ன வெங்காயம், பூசணிக்காய், வெண்டைக் காய், முருங்கை உள்ளிட்ட காய்கறிகள் கோவை, மேட்டுப் பாளையம், சிறுமுகை, குண் டல் பேட், மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து பெருமளவு கொள் முதல் செய்யப் பட்டு நீலகிரி மாவட்டத்தில் விற் பனை செய்யப்படுகிறது. இத னால் காய்கறிகளின் விலை சற்று கணிசமாக குறைந்து இருந்தது. இந்த நிலையில் நீலகிரி மாவட்

டத்தில் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து போனதால் கடும் வறட்சி ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக விவ சாய நிலங் கள் பெருமளவு அழிக் கப்பட்டு வீட்டு மனைகளாக மாற்றப் பட்டு வருகின்றன.

காய்கறிகளின் விலை கிடு கிடு உயர்வு

இந்த நிலையில் ஊட்டியில் காய்கறிகளின் விலை கிடு கிடு என உயர்ந்து உள்ளது. ஊட்டி உழவர் சந்தையில் காய்கறி களின் நேற்றைய விலை நில வரம் (கிலோவுக்கு) வருமாறு: சி.வெங்காயம் ரூ.64, பெ.வெங் காயம் ரூ.20, தக்காளி ரூ.42, அவரைக்காய் ரூ.50, கத்திரிக் காய் ரூ.32, புட லங்காய் ரூ.28, பீர்க்கங்காய் ரூ.32, பாகற்காய்ரூ.38, பச்சை மிளகாய் ரூ.40, பொறியல் தட்டை ரூ.32, உரு ளைக்கிழங்கு ரூ.40, முருங்கைக் காய் ரூ.30, கேரட்ரூ.45, பீட்ரூட் ரூ.34, காலி பிளவர் ரூ.48, பூண்டு ரூ.70, இஞ்சி ரூ.160, ஊட்டி அவரை ரூ.90, பட்டாணி ரூ.85, குடை மிளகாய் ரூ.60க் கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஊட்டியில் காய் கறிகளின் விலை உயர்வால் இல்லத் தரசிகளை கவலை கொள்ள செய்து உள்ளது.

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறும் போது, நீலகிரி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்து போனதால் விவ சாய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த விலை உயர்வு மேலும் அதி கரிக்க வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்துக்கு ரூ.14½ கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது கண்காணிப்பு அலுவலர் தகவ ல்

திருவண்ணாமலை,

முதல்அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்துக்கு ரூ.14 கோடியே 39 லட்சத்து 17 ஆயிரம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது என்று கண்காணிப்பு அலுவலர் தங்ககலியபெருமாள் கூறினார்.

கண்காணிப்பு கூட்டம்

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் மாவட்டத்தில் பல்வேறு குறைகளின் மூலம் செயல் படுத்தப்படும் திட்டப்பணிகள் மற்றும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து கண்காணிப்பு ஆய்வு கூட்டம் நடந்தது. கலெக்டர் விஜய் பிங்ளே தலைமை தாங்கினார். தமிழக அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி திட்டத்துறையின் செயலாள ரும், திருவண்ணாமலை மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலருமான தங்ககலிய பெருமாள் கலந்து கொண்டு ஆய்வு செய்தார்.

ஆய்வு

வேளாண்மை துறையின் மூலம் பயிர்கள் நெல், பருப்புவகைகள், எண்ணை வித்துக்கள், பருத்தி, கரும்பு ஆகியவை எவ்வளவு பயிர் செய்யப்பட்டுள்ளது என்றும், தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பயிர்கள், பழவகைகள், காய்கறிகள், மலர்கள், செடிவகைகள், மருத்துவ பயிர்கள் போன்ற பயிர்கள் குறித்தும், வேளாண்மை பொறியியல் துறையினரும், கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் வழங்கப் பட்டுள்ள கறவை மாடுகள், ஆடுகள், கால்நடை தீவனங்கள், நபார்டு திட்டத்தின் மூலம் அமைக்கப்பட உள்ள மீன் பண்ணைகள், பால் உற்பத்தி, பொது வினியோக திட்டத்தில் வழங்கப்படும் அரிசி, மண்எண்ணை, சர்க்கரை, பாமாயில் ஆகியவை குறித்தும் மற்றும் பல்வேறு துறைகள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார். பின்னர் கண்காணிப்பு அலுவலர் தங்க கலியபெருமாள் பேசியதாவது:

ஸ்மார்ட் கார்டு

முதல்அமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் மொத்தம் உள்ள 6 லட்சத்து 43 ஆயிரத்து 780 குடும்பத்தினருக்கு இதுவரை 4 லட்சத்து 49 ஆயிரத்து 36 ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட் டுள்ளது. வருவாய் துறையின் மூலம் பட்டா வழங்கியது, பட்டா மாற்றம், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முதியோர் உதவித்தொகை, மாற்று திறனாளிகளுக்கான உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோருக்கான உதவித்தொகை, விவசாய கூலி உதவித்தொகை ஆகிய திட்டத்தின் மூலம் ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 29 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இதற்காக ரூ.ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 205 லட்சம் நிதி வழங்கப் பட்டுள்ளது.

உழவர் பாதுகாப்பு திட்டம்

முதல்அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 14 லட்சத்து 34 ஆயிரத்து 591 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதற் காக ரூ.14 கோடியே 39 லட்சத்து 17 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு இதுவரை ரூ.3 கோடியே 85 லட்சத்து 36 ஆயிரத்து 750 உதவித்தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு துறைக்கும ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை முறையாக மக்களுக்கு சென்றடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும். அரசு திட்டப்பணிகளை உயர் அதிகாரிகள் அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும். மேலும் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களை சென்றடைகிறதா என்று தணிக்கை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வளர்மதி, கூடுதல் கலெக்டர் ஆனந்த், கலெக்டரின் நேர்முக உதவியாளர் லில்லி, இணை இயக்குனர் (மருத்துவம்) ராமலிங்கம், வேளாண்மை இணை இயக்குனர் சக்கர வர்த்தி, திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் விஜயலட்சுமி மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பசுமை வீடு திட்டம்

முன்னதாக வந்தவாசி, தெள்ளார், பெரணமல்லூர், துரிஞ்சாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெற்று வரும் பசுமை வீடு திட்டம், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டம், தாய் திட்டத்தின் மூலம் அமைக் கப்படும் சாலைப்பணிகள், அங்கன்வாடி கட்டிடப் பணிகள் போன்றவற்றை கண்காணிப்பு அலுவலர் தங்ககலியபெருமாள் ஆய்வு செய்தார்.

## தஞ்சாவூரில் இலவச கயிறு திரிக்கும் பயிற்சி நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

நாமக்கல்,

தஞ்சாவூரில் இலவச கயிறு திரிக்கும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்த பயிற்சி பெற நாமக்கல் மாவட்டத்தை இருபாலரும் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கயிறு பயிற்சி

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மத்திய அரசின் கீழ் இயங்கி வரும் கயிறு வாரியத்தின் மண்டல விரிவாக்க மையம் பிள்ளையார்பட்டி, வள்ளம் வழி தஞ்சாவூரில் கயிறு திரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 6 மாத கால கயிறு ‘‘ஆர்டிசன்’’ பயிற்சி வகுப்பில் சேருவதற்கு 18 வயது முதல் 45 வயதிற்கு உட்பட்ட இருபாலர் ஆண், பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. கயிறு பயிற்சிக்கு எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும். பயிற்சியின் போது மாதம் ரூ.750 உதவித்தொகை வழங்கப்படும். பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி வசதி உண்டு. இந்த பயிற்சி 1.7.2013–ந் தேதி முதல் தொடங்கப்படும்.

விண்ணப்பங்கள்

இந்த பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்ப படிவங்களை அலுவலக வேலை நாட்களில் நேரிலோ, கடிதம் மூலமாக இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள், ‘‘வளர்ச்சி அலுவலர், மண்டல விரிவாக்க மையம், பிள்ளையார்பட்டி, வள்ளம் வழி

தஞ்சாவூர் – 613 403'' என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 17–ந் தேதிக்குள் அனுப்பி வைத்திட வேண்டும். எனவே நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த விருப்பமுள்ள நபர்கள் இந்த பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம் என மாவட்ட கலெக்டர் ஜெகநாதன் தெரிவித்து உள்ளார்.

## தர்மபுரி மாவட்டத்தில் பலத்த காற்றுடன் பெய்த கோடை மழை விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி,

தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை மழை பரவலாக பெய்தது. அரூர் பகுதியில் அதிகபட்சமாக 53 மில்லி மீட்டர் மழை பதிவானது. இந்த கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோடை மழை

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக 100 டிகிரி முதல் 105 டிகிரிக்கு வரை வெயில் அடித்தது. அக்னிவெயிலின் தாக்கத்தால் பொதுமக்கள் பெரும் சிரமப்பட்டனர். இரவு நேரங்களிலும் அனல்காற்று வீசியதால் பொதுமக்கள் தூக்கம் வராமல் தவிக்கும் நிலை ஏற்பட்டு வந்தது. வெயிலின் தாக்கத்தால் கோடை மழை பெய்யாதா? என்று பெரும்பாலானோர் ஏக்கத்துடன் காத்திருந்தனர்.இந்தநிலையில் கடந்த சில நாட்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. நேற்று முன்தினம் மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இந்த கனமழை காரணமாக சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. நீண்ட நாட்களுக்கு பிறகு கோடை மழை பெய்ததால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மழை அளவு

நேற்று முன்தினம் தர்மபுரி மாவட்டத்தில் அரூர் பகுதியில் 53 மில்லி மீட்டர் மழையும், பாப்பிரெட்டிப்பட்டியில் குறைந்தபட்சமாக 4.50 மில்லிமீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–தர்மபுரியில் 24 மில்லி மீட்டரும், பாலக்கோட்டில் அரூரில் 53 மில்லி மீட்டரும், பாப்பிரெட்டிப்பட்டியில் 4.50 மில்லி மீட்டரும், பாலக்கோட்டில் 15.30 மில்லி மீட்டரும், பென்னாகரத்தில் 37 மில்லிட்டரும், ஒகேனக்கல்லில் 3 மில்லி மீட்டரும், மாரண்டஅள்ளியில் 29 மில்லி மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 195.97 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. மாவட்டத்தில் சாரசரியாக 27.97 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.